1909

4

உ

கடவுள் துணை.

வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

திருவாய்மலர்ந்தருளிய

புலந்திரன்களவுமாலை.

இஃது-மயிலம்.

சுப்பிரமணியசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு.

சென்னை-இட்டா

பார்த்தசாரதிநாயுடு

அவர்களாற்றமது

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1909

சென்னை ஆச்சாரப்பன்தெரு நெ-84.

உ

கடவுள் துணை.

புலந்திரன்களவுமாலை.

விநாயகர் துதி.

அத்திமுகத்தோனே அரனார்திருமகனே
சத்திக்கணபதியே சங்கரனார்திருமகனே
பானைவயிற்றோனே பழமேந்துங்கையோனே
ஆனைமுகத்தோனே ஐங்கரனேமுன்னடவாய்
வேலவர்க்குமுன்பிறந்த வித்தைக்களஞ்சியமே
மூலமுதலே முன்னடக்கவேண்டுமையா.

சரஸ்வதி துணை.

நாவிற்சரஸ்வதியே நான்முகனார்தேவியரே
சதுர்முகனார்தேவியரே தாயேசரஸ்வதியே
வாக்குவரமருள்வாய் மறையவனார்தேவியரே
நாவுதவறாமல் நற்கருத்தைத்தாருமம்மா
இந்தக்கதைதனக்கு இனிகருத்தைத்தாருமம்மா
பூவிலமர்ந்ததொரு பொற்கொடியேநான்சரணம்
சரணமென்றடிபணிந்தேன் தற்காக்கவேண்டுமம்மா
தப்புகளுண்டாயின் தாயேயருள்புரிவாய்
குற்றமிருந்தாலும் கொண்டணைக்கவேண்டுமம்மா
புலந்திரனார்கதையுரைக்கப் புத்திவரமருள்வாய்.

பாண்டியன் பெருமை.

பட்டணமாம்பட்டணமாம் மதுராபுரிபட்டணமாம்
பட்டணத்தையாளுகிற பாண்டியராசாக்கள்
மதுரைபதிதனிலே மன்னர்கள்ராசாக்கள்
நீதிமனுமுறைகள் நெறிதவறாபாண்டியர்கள்
ஆறிலொருகடமை அரசர்கள்வாங்குவது
சொக்கர்வலுமையுண்டு துரைராசபாண்டியர்க்கு
மீனாட்சிவலுமையினால் மேன்மையுடனாண்டிருந்தார்
சக்கரநெறிப்படியே தரணிதனையாண்டிருந்தான்

அல்லியரசாணி உற்பத்தி.

இப்படியாகவே இருக்கின்றநாளையிலே
ஆருயிரவர்களும் அணிதிரளாம்பாண்டியர்கள்
பிள்ளையைவேண்டியே பெருந்தவசுதானிருந்தார்
மைந்தனைவேண்டியே மகாதவசுதானிருந்தார்

சோலைமலருடைய சொக்கரைநோக்கியேதான்
கால்கள்நடுங்கவேந்தான் கடுந்தவசுதானிருந்தார்
சங்கருமப்பெயரது தயவாய்மனமிரங்கி
அங்கையர்க்கண்மீனாட்சி அருளுமிரங்கியேதான்
சந்திரர்கள்சூரியர்கள் சந்திபண்ணும்பொய்கையிலே
செவ்வலரிப்பூவிலே செல்வம்பிறந்ததுகாண்
அல்லிமலரிலே அவரித்தாள்பெண்பெருமாள்
குழந்தையைப்பார்க்கவே கொற்றவர்கள்ராஜாக்கள்
கண்டுமனமகிழ்ந்தார் காவலர்கள்ராஜாக்கள்
பார்த்துமனமகிழ்ந்தார் பாண்டியராஜாக்கள்
கண்டெடுத்துக்கொண்டுவந்தார் காவலர்கள்ராஜாக்கள்
வைத்துவளர்த்தெடுத்து மரிவுள்ளபெண்கொடிக்கு
அல்லியரசாணியென்று அரசியற்குபெயருமிட்டு
நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாய்
வைத்துவளர்த்தார்கள் வண்டார்கருங்குழலை

அல்லியரசாணி பராக்கிரமம்.

ஏழுவயதாச்சு இளங்கொடியாள்நாயகிக்கு
பாதிஅரசு பகுந்தாண்டநீண்முகனை
மூடிக்கவந்தநீண்முகனை முந்திமயிர்பிடித்து
குடலைபிடுங்கியேதான் கொம்பனையும்மாலையிட்டு
பெண்ணரசுபட்டங்கட்டி பெருக்கமுடன்வாழ்ந்திருந்தாள்
ஆண்காற்றடித்தாலே அதம்பண்ணிப்போட்டிடுவாள்
கண்டவரைக்குத்தியே கழுவிலேஏற்றிடுவாள்
எண்ணவொண்ணாச்சேனையுடன் எடுத்தாளேமந்திரவாள்
மந்திரவாளெடுத்து மதயானைபோலெழுந்து
எதிர்க்கத்தான்கண்டவரை யெண்ணியேபாராமல்
கண்டமுனிராட்சதரைக் கண்டதுண்டமாக்கிடுவாள்
வடமதுரைக்கன்னாடு வடதேசபட்டணமும்
ஈழகலிங்கதேசம் இணமுள்ளபட்டணமும்
முத்துகப்பலாயிரமும் முளகுகப்பலாயிரமும்
பாக்குளத்துறையும் பாண்டிவளநாடும்
இத்தனைநாடுகளும் இடமுள்ளராச்சியமும்
பட்டமுங்கட்டியிவள் பாருலகையாண்டிருந்தாள்
பத்துவயதாச்சு பைங்கொடியல்லியற்கு
வளர்ந்துசமைந்தாள்காண் மாதருதுவானாள்

ஸ்ரீகிருஷ்ணர் அல்லியை அர்ச்சுனற்கு பாரியாளாக நினைத்தது.

ஏழுலகையாண்டதொரு எம்பெருமாள்தான்பார்த்து
அல்லிமலரி லவதரித்தபெண்பெருமாள்
அழகில்மிகுந்ததொரு அல்லியரசாணியை
தக்கபுகழுடைய தருமாதுதம்பியரை
காண்டாவனமெரித்த காளையர்தஅருச்சுனற்கு

ஆனாலழகருக்கும் அல்லியரசாணியற்கும்
அவர்களழகுக்கும் ஏற்குங்காண்வையகத்தில்
என்றுசொல்லிமாயவனார் இயலாகதானினைத்து
சோலமலருடைய சொக்கரும்மாயவரும்
அருளால்மிகுந்ததொரு அங்கையற்கண்ணாயியும்
தேவாதிதேவருடன் தென்மதுரைவந்துநின்று
அடங்கலுந்தானழைத்து ஆறுயிரவருமாய்
பெண்கேட்கவந்தோங்காண் பேருலகில்ராஜாவே
பெண்ணாய்ப்பிறந்தாலும் பிழையில்லாப்பெண்பெருமாள்
சீனமுகனைக்கொன்று சீலியிட்டபெண்பெருமாள்
கூடியவர்தானினைத்து கொம்பனையைக்கொள்ளுதற்கு
மதுரைப்பதியாளும் மன்னவர்கள்பாண்டியரே
மணக்கோலம்வந்தோங்காண் மன்னவரேயிப்பொழுது
என்றுயிவருரைக்க இராசமன்னரப்பொழுது
ஆறுயிரவர்களும் ஐயன்மாரேதுசொல்வார்
மந்திரவாளோடே மயிலனையாள்தான்பிறந்தாள்
கண்டவரைக்கொன்று கழுவிலேயேற்றிவைப்பாள்
அண்டாப்பெருசீலி ஆர்சொல்லுங்கேளாளே
அப்படிக்கொத்தவளை அண்டப்பயப்படுவோம்
அவளுக்குஏற்றவர்தான் அருச்சுனரேயாகுமென்றார்
ஆண்காற்றடித்தால் அதம்பண்ணிபோட்டிடுவாள்
உங்களாலானபடி உத்தமரேபாருமென்றான்

அருச்சுனன் பாம்பாகவும் பெருமாள் பிடாரனாகவருதல்.

ஏழுலகையாண்ட யெம்பெருமாள்தான்கேட்டு
என்னாலேயாகுமென்று எழுந்திருந்தாரெம்பெருமாள்
காண்டாவனமெரித்த காளையென்னுமருச்சுனரை
ஐந்துதலைநாகம்போல் அடைவாய்வடிவாக
மண்ணுளிப்பாம்பு வகையானசர்ப்பமுடன்
புண்ணியமூர்த்தி பிடாரனைப்போல்வேஷங்கொண்டு
வேஷம்உருவெடுத்து வேறேயுருமாறி
அரசாளும்நாயகியாள் அல்லியிடபட்டணத்தில்
தண்ணீர்குளத்தருகே தார்வேந்தர்வந்துநின்று
பொற்பாம்புதன்னைவிட்டுப் பெருமாளும்ஆட்டிவைத்தார்
ஆயக்குழலூதி ஆயனுமாட்டிவைத்தார்
பாடாதசிந்துகவி பாடினார்மாயவரும்
அரசாளும்நாயகியாள் அல்லியிடத்தாதியர்கள்
பூங்காவனத்திலே பொய்கையருகாக
மாயன்பெருமாளும் மகாமயக்கந்தான்செய்து
மகுடிக்குழலூதி மன்னவரும்ஆட்டிவைத்தார்
ஆட்டினார்நாகமும் ஆடுதுகாண்அந்நேரம்
பாட்டுக்கிசைவாகப் பாம்புகளாடுதுகாண்

தண்ணீர்குடமெடுத்துத் தண்ணீர்க்குவந்தவர்கள்
பாம்பாடும்பாவனையை பைங்கிளிமார்தான்பார்த்து
அரசாளும்நாயகியாள் அல்லியரைதெண்டனிட்டு
நமதுமதுரைவளநாட்டில் வந்ததேநற்பாம்பு
தண்ணீர்குளத்திலே தார்குழலேயாடுதென்றார்
பாம்பாடும்பாவனையை பட்டணத்தில்கண்டதில்லை
அந்தஅழகும் அதிசயமுங்கண்டறியோம்
என்று அவளுரைக்க ஏந்திழையுந்தான்கேட்டு
அப்படிப்பட்டதொரு அழகுள்ளநற்பாம்பை
இங்கேயழையுமென்றாள் வந்திழையாளல்லியரும்
அப்படியேபோக அழைத்துவந்துவிட்டார்கள்
பாம்பைதிறந்துவிட்டார் பார்வேந்தர்மாயவரும்
மகுடிக்குழலூதி மாயவனாடிநின்றார்
பாம்பாடும்பாவனையைப் பைங்கிளியுந்தான்பார்த்து
மன்னன்மேல்சிந்தையுமாய் மயங்கினாள்மங்கையரும்
மாயவனைத்தான்பார்த்து மயிலனையாளல்லியம்மாள்
பாம்பையனுப்புமென்றாள் பைங்கொடியுந்தன்னருகே
அப்படியேநற்பாம்பு அவளருகேவந்ததுகாண்
பாம்புமடியேறப் பைங்கிளியும்பார்த்திருந்தாள்
முன்னழகும்பின்னழகும் முதுகில்மட்சைரேகைகளும்
அரசாளுமநாயகியாள் அல்லியரும்பார்த்தாள்
காண்டாவனமெரித்த காளையருச்சுனனும்
சொக்குப்பொடிபோட்டார் தேன்மொழியாளல்லியரும்
மாதுசவுரியம்போய் மயங்கினாளருச்சுனன்மேல்
மயங்கியெழுந்திருந்து மாயவனைத்தான்பார்த்து
பாம்பையடையுமென்றாள் பைங்கொடியாளல்லியரும்
அந்தப்பிடாரன் அடைவாகப்போனபின்பு
அரசாளும்நாயகியாள் அல்லியருந்தான்பார்த்து
ஆருயிரவரென்னும் அணிதிரளாம்பாண்டியர்கள்
தந்தையார்சீர்பாதந் தையலடிபணிந்து
தக்கப்புகழுடைய தருமரிடதம்பியரை
காண்டாவனமெரித்த காளையெனுமருச்சுனனே
இந்தட்சணமே இயலாவழையுங்கள்
கலியாணங்கூட்டுமென்றாள் காரிழையல்லியரும்
ஆருயிரவர் அணிதிரளாம்பாண்டியர்கள்
வற்றிக்கிடந்த வருள்பெரியகாவேரி
முட்டப்பெருகியே கரைபுரண்டுவந்தாற்போல்
திரேகங்குளிர்ந்தாரே இருதோளும்பூரித்து
தக்கப்புகழுடைய தருமர்தனஞ்செயற்கு
எழுதினார்பாண்டியர்கள் இன்பமாயோலைதன்னை
காண்டாவனமெரித்த காளையந்தஅருச்சுனற்கும்

அரசாளும்நாயகியாள் அல்லிமலர்நாயகிக்கும்
சித்திரைமாதத்திலே சீர்பத்தாந்தேதியிலே
சுக்கிரவாரமது தசமிபுனர்பூசம்
அன்றையவேளையிலே அர்ச்சுனர்க்கும் அல்லியற்கும்
கலியாணம்கலியாணம் காரிழைக்குகலியாணம்
கலியாணமென்றுசொல்லி கணமானவோலைப்போ
இட்டோமுகூர்த்தமென்று எழுதினாரோலையிலே
ஓலைகண்டநாழிகைக்கு உத்தமரேவாருமென்றார்

கலியாணம்.

என்றிருக்குமோலைதன்னை இராஜாக்கள்தான்பார்த்து
ஐவர்பஞ்சபாண்டவர் அனைவோருந்தான்பார்த்து
தக்கப்புகழுடைய தருமரவரேதுசொல்வார்
இதுநல்லகாரியங்கள் என்றுமனதிலெண்ணி
சரியொத்தசம்பந்தம் ஆரென்றுதார்வேந்தர்
மதுராபுரிதனக்கு மன்னவர்கள்பயணமானார்
துரௌபதைநாககன்னி சுபத்திரையும்பயணமானார்
மந்தாரக்குந்தியம்மாள் மாதாவும்பயணமானார்
வந்துயிறங்கினார் மதுராபதிதனிலே
அரனார்திருவுளத்தால் அருச்சுனற்கும்அல்லியற்கும்
செய்யுஞ்சடங்குவகை செய்தார்கள்வேதியர்கள்
மங்கிலியந்தானெடுத்து வாள்விசையன்தான்தரித்தான்
மாதுகழுத்திலே மங்கிலியஞ்சாற்றினபின்
கூடியிருந்தார்கள் குங்குமக்கட்டிலின்மேல்
அருச்சுனருமல்லியரும் அமர்ந்திருந்தாரந்நேரம்

புலந்திரனுற்பத்தி.

அப்படியாகவேதான் அனேகநாட்சென்றபின்பு
பாலகனுண்டானான் பைங்கிளியாளல்லியற்கு
பத்துமாதமுஞ்சென்று பைங்கொடியாளல்லியரும்
பெற்றாள்புலந்திரனை பேருமிட்டாளல்லியரும்
வளர்த்தாள்புலந்திரனை வைத்திருந்தாளல்லியரும்

புலந்திரனுக்குக்கலியாணம்.

ஐந்துபிராயமது அடைவாய்வளர்ந்தபின்பு
தேசத்தழகுமன்னன் திரியோதிரன்தங்கை
துன்னுங்கருங்குழலாள் துற்சடையாள்தன்மகளை
அந்தகாரிழையாள்மாது கலந்தாரிநாயகத்தை
போரஞ்சாமன்னர் புலந்திரவீரியற்கு
கலியாணம்பண்ணவே காரிழையாளல்லியரும்
சரியொத்தசம்பந்தம் தார்குழலாள்வேண்டுமென்று
வேண்டுமென்றுசொல்லி விரும்பியேமங்கையரும்
ஐவரும்நூற்றுவரும் அப்பாலேகூடியொன்றாய்
கூடிமணஞ்செய்தார்கள் குமாரன்புலந்திரற்கு

கலியாணஞ்செய்துமே கடிமுடிந்தபின்பு
அப்படியாகவே அநேகநாள்சென்றபின்பு
தேசத்தழுகுமன்னன் திரியோதனப்பெருமான்
பருவமதயானை பஞ்சவர்களைவரையும்
உருவமதயானை உத்தமர்களைவரையும்
வலியவேதானழைத்து மாயத்தால்சூதாடி
பாரவனவாசம் பஞ்சவர்கள்போயிருக்க
அன்றுமுதலாக அருச்சுனனார்புத்திரரும்
காரிழையாள்மாது அலந்தாரிநாயகியும்
அவரவர்கள் தாய்வீட்டில் அருமையாய்த்தானிருக்கும்
தங்கள் தங்கள் தாய்மனையில் சதிருடனேவளருகிறார்

அல்லிகொலுச்சபை.

அப்போது அல்லியவள் அரசாளும்நாயகியாள்
அஞ்சாப்பெரும்புலியாம் அரிவையிளமங்கையரும்
ஆசாரமண்டபத்தில் அருங்கிளியும்வீற்றிருந்தாள்
ஈண்டிசையுஞ்செங்கோல் எதிரொருவரில்லாமல்
தப்பாதரசாண்டாள் தாமரைசூழ்நாயகியாள்
முத்துவளநாடும் முடிகவியும்பெண்பெருமாள்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளல்லியரும்
கொம்பேரிடையாள் கொலுக்கலைந்தபிற்பாடு
வண்டார்குழலாளும் மாளிகையிற்போய்புகுந்து
சிங்காதனத்திலே தேன்மொழியும்வீற்றிருந்தாள்
தனக்குக்கவரியிடும் மங்கையரைத்தானழைத்து
வயிரக்கவரியிடும் மங்கையரைத்தானழைத்து
முத்தின்கவரியிடும் மூப்பிமாரும்நோக்கி
செம்பொன்கவரியிடும் தேன்மொழியேநீகேளாய்

அல்லிசொற்பனங்கண்டது.

சென்றராத்திரியில் நித்திரைபோம்போது
சொற்பனங்கண்டேனன் தாழங்கருங்குழலே
தாழக்கருங்குழலாள் தாதியருக்கூறலுற்றாள்
ஏதென்றுசொற்பனங்கள் எனக்கறியக்கூறுமென்றாள்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கூறுகிறாள்
சோலைமலருடைய சொக்கனார்கோவிலுக்கு
சேவிக்கப்போனதாய் தேன்மொழியேநான்கண்டேன்
சோலைமலருடைய சொக்கரவர்பார்த்து
சிவனுமப்பொழுது செங்கழுநீர்பூவெடுத்து
அங்கயற்கண்ணம்மை அகிலாண்டநாயகியும்
கொண்டுவந்துஎன்கையில் கொடுத்தாளேபார்வதியும்
மைந்தர்புலந்திரற்கு வாங்கினேனேற்குமென்று
ஏற்குமென்றுவாங்கி இந்திரர்கைகொடுத்தேன்

அதனையவர்வாங்கி அவள்தேவிகைகொடுத்தான்
மங்கையரும்செல்வம்பெற்று வளர்ந்துயிருக்கக்கண்டேன்
நன்மையோ தின்மையோ நாயகமேகூறுமென்றாள்
தாமக்கருங்குழலாள் தாயருங்கூறலுற்றாள்
ஆச்சிநீகண்டகனா அறியவேசொல்லுகிறேன்
உன்மைந்தனுக்குமைந்தன் வாய்க்குங்காண் தப்பாது
புத்திரர்க்குப்புத்திரர் வாய்க்குங்காண் தப்பாது
பிரவாமுடிதரித்த பெண்பெருமாள்கூறுவாள்
ஆடிதாதியரே அன்னபசுங்கிளியே
பஞ்சவர்கள்நாடுவிட்டு பாரவனம்போயிருக்க
ஐவருங்காட்டகத்தே அனல்பிறந்தாள்காட்டகத்தே
மாலைமுடியார்கள வனவாசம்போயிருக்க
வண்டார்குழலாளும் மயிர்விரித்துப்போயிருக்க
எந்தவனத்திலே இருக்கிறாரென்றறியேன்
பஞ்சவரும்நாடுபெற்று நாமும்பயந்தெளிந்து
கொற்றவர்கள்நாடுபெற்று வருங்காலமெக்காலம்
வண்டார்குழலாளும் வாழ்பெறுவதெக்காலம்
என்மைந்தருக்குமைந்தருமாய் வாய்ப்பதுமெக்காலம்
என்றுதுமெண்ணியே ஏங்கிமுகம்வாடினாள்
தாமக்கருங்குழலாள் தாயருங்கூறுகிறாள்
நீர்கண்டகனவுநன்மை கன்னியரேநீர்கேளீர்
மைந்தருக்குமைந்தராய் வாய்க்கும்பூங்கிளியே

புலந்திரன் பள்ளியறைக்கு அல்லிவந்துகாண்கிறது.

பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்கூறுகிறாள்
போரஞ்சாமன்னன் புலந்திரவீரியனார்
எமபாண்டிப்பெருமாளின் பள்ளியறையெங்கேயென்றாள்
மண்டபத்துக்குள்ளாக மன்னவனார்பள்ளியென்றார்
எங்கேயென்றுசொல்லி எழுந்திருந்தாளல்லியரும்
சிங்காதனத்தைத் திகழக்குதித்திறங்கி
தாமக்கருங்குழலாள் தாயருமப்போது
கட்டழகிபெண்ணை கன்னியரேவாருமென்று
மெத்தனவேதானடந்து மேல்பொருதுங்கண்ணாளும்
சித்திரஞ்சேர்மண்டபத்தே சென்றாள்திருவனையும்
தாள்பூட்டிப்பள்ளிகொண்டு தனஞ்செயனும்பள்ளிகொண்டான்
தாமக்கருங்குழலாள் தாயருமப்போது
பேர்சொல்லித்தானழைத்தாள் பெருமாள்புலந்திரனை
அஞ்சவாய்மாதே ஆரெனக்கேபோவென்று
வாளாலேவெட்டி வளைபோடுவானிறந்தாள்
வந்தித்திறந்தானே இந்திரனார்பெற்றதனை
தருமமுடியானுந் தனித்துபடுத்திருந்தான்

தேவியுடனேசிவர் இருக்குமுடன் கூடாமல்
தனியாகப்பசித்திருக்கச் சங்கரனார்கட்டளையோ
பசையோன் தலைக்கடையில் பக்கசவாசலிலே
மாதைத்தழுவிஇருக்க மாபாவிவாசலிலே
கோதைதழுவிஇருக்க கொடும்பாவிவாசலிலே
சகுனிதலைக்கடையில் சண்டாளவாசலிலே
மாற்றானுறங்கும்வாசலிலே மாலையிடப்பெற்றேனே
மற்றொருவர்வாசலிலே மாலையிட்டேனே
பொற்கைவளை யியவரைப் போகவரப்பார்த்தேனோ
வண்டார்குழலாளை வரப்போகப்பார்த்தேனோ
கொம்பனையாள்செய்தகொரு குடிவாழ்க்கைப்பார்த்தேனோ
இந்திரனார்தேவிசெய்யும் சீயல்வாழ்க்கைப்பார்த்தேனோ
காணாதிருந்தேனே கண்ணாரமாய்ந்தேனே
பாராதிருந்தேனே பாவிநானானேனே
வமந்தர்புலந்திரனைப் பார்த்தாள்பாலகனும்
கால்கள்தொடங்கியே சரியகுழல்வாயு
பார்த்தாள்பாலகனும் பார்த்தான்திருமகளை
தாமக்குழலாளும் தன்திருமுகம்நோக்கி
இவர்-பொய்யாமொழியும் பெருமைதலையழகும்
இவர்கள்தன்னழகும் ஆசாரப்பேரழகும்
நாகநெறியுந் தவத்திறம்பொருமைகளும்
தக்கப்புரமுடைய தருமனைப்போலிருக்கும்
இந்திரனார்மார்புமிடப்பெரிய திண்டோளும்
வெற்றிமதாயனை வீமனைப்போலிருக்கும்
அழகும்இளமையும் அர்ச்சுனனைப்போலிருக்கும்
தலையுந்தலைக்கட்டும் சகாதேவன்போலிருக்கும்
நடையும்உடையழகும் நகுலனைப்போலிருக்கும்
வீரமும்விரற்கொடையும் வேந்தனைப்போலிருக்கும்
காவிலாகாடாருங் கர்னனைப்போலிருக்கும்
இவர்திருவழகும் அருமைமகன்தானுமுண்டு
வேலெடுக்குமோ வேலாபொருதிங்கனனோ
வமந்தர்புலந்திரனை வாளாலேதட்டிவிட்டாள்

புலந்திரன் தாயாரைக்காண்கின்றது.

சிறந்ததான்தட்டலுமே குருமர்திருமகனும்
பொட்டெனவே கண்விழித்து புலந்திரனார்தான்பார்த்து
அவர்-அஞ்சிப்பயந்து அட்சணமெழுந்திருந்து
உத்தமனார்வேந்தன் உருமாலைதானெமூல
திட்டெனவேதான்குதித்தான் செம்பொன்னின்மெத்தைவிட்டு
பூங்காவில்போகவென்றால் பொற்கொடியுங்கிட்டிவந்தாள்
மலர்க்காவில்போகவென்றால் மாதாவுங்கிட்டிவந்தாள்

மாலைமுடியானும் மலரணையிற் பூவெரித்து
மாதாவின்பாதமதை மலர்தூவித் தண்டனிட்டான்
வந்துபணிந்தவனை வாளாலே தானெடுத்து
மாணிக்கமெத்தைதன்னை வாளாலே தான்விலக்கி
ஏதிபிருந்தாளே ஏகாந்தகட்டிலின்மேல்
போராஞ்சாமன்னன் புலந்திரனுங் கூறலுற்றான்
இந்நேரம் ஆச்சிநீ இங்கு வந்தகாரியமேன்
நான்-செய்துவந்தகாரியத்திற் செய்தபிழையுமுண்டோ
ஊரிற்புதுமையுண்டோ உள்ளூரிற்குற்றமுண்டோ
நாட்டிற்புதுமையுண்டோ நம்மூரிற்குற்றமுண்டோ
யானைபடுகுழியும் ஆச்சிமிகராச்சியத்தில
மெத்தகளவுகள் மெல்லியரேவந்ததுண்டோ
கப்பலுஞ்சோங்குங் களவுகள் மெத்தவுண்டோ
இந்நேரம் ஆச்சிநீ இங்குவந்தகாரியமேன்
சொல்லியேதான்தொழுதான் சுந்தரப்பூமுடியான்
வேறொன்றுமில்லையையா வேந்தர்பெருமானே
அஞ்சாதேயென்று சொல்லி அணைத்தெடுத்ததாதியர்கள்
ஆடையொதுக்கியே ஆபரணம் ஒப்பமிட்டு
உத்தமனார்வேந்தருக்கு உருமால்தானுங்கட்டி
காவலனார்வீரியனுங் கைகட்டிநின்றானே
அஞ்சிமெய்நின்றானே ஐயன்பெருமானும்

புலந்திரனுக்குத் தாய்சொல்லுகிறது.

மைந்தன்புலந்திரனை வளநாடிதானபார்த்து
தருமமுடியானே தனியாகப்பள்ளிகொண்டாய்
உன்-மச்சினியாள தானொழிய அசல்நாட்டாளாகாதோ
அத்தைமகளொழிய அசலநாட்டாளாகாதோ
ஐயனார்கோவிலிலே ஆடும்அரம்பையராகாதோ
நாடகசாலையிலும நாடகிமார்தங்களிலும
வேறொருத்தியாகாதோ விஜயனமகனுரே
கொம்பேரிடையானே கோவிலிலேதேவடிமார்
எண்பத்தெண்ணாயிரம்பே ரிளங்கொடிமார்தானுமுண்டு
அன்னநடைமாதர்களும் ஆகாதோமன்னவனே
தருமமுடியானே சட்டபுவந்தகாரணமேன்
மதுரையம்பதாறுகாதம ஆள அரசிருக்க
ஆறுபிரவரென்னும அணிதிரளாமபாண்டியர்கள்
பொன்னணிப்பலகாடாளும போரெழுதிஅயமானும்
மாலைமுடியானும மாமனமார்தானிருக்க
நானுமிருக்கையிலே நாயகரேயுகதனுக்கு
தருமமுடியானே சலிப்புவந்தகாரணமேன்
நன்றாகமைந்தனே நானபெற்றெனனிருந்தேன்
பொன்னாகவும்மையும பெற்றதும்மாணதிமேன்

புலந்திரன் சொல்லல்

போராஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறலுற்றான்
வாய்புதைத்துக்கைகட்டி மன்னனெடுத்துரைப்பான்
ஆச்சிரேசேனி ரடியேனைவாய்விண்ணப்பம்
தேசக்கழுதுமன்னனை திரியோதிரனபாவி
பருவமதையானை பஞ்சவர்களைவரையும்
உருவமதயானை உத்தமர்களைவரையும்
விருந்தமிர்தயென்றுசொல்லி வேந்தரைத்தானழைத்து
வனுவிலேகானழைத்து மாயத்தாற்சூதாடி
மாயத்தாற்சூதாடி மண்ணிழக்கமணபரித்து
உபாயத்தாற்சூதாடி தருமாபுரந்தோற்று
எத்தேசமுந்தோற்று விருபபீடமுந்தான்தோற்று
வில்தோற்றுவாள்தோற்று வீமாபுரந்தோற்று
தக்கபுகழுடைய தர்மாவர்களவரையும்
வீமனருச்சுனரை வேந்தரவர்தோற்று
நகுலசகாதேவ ராசர்களைத்தோற்று
தமமையுந்தோற்று தம்பிமாரையுந்தோற்று
ஆடைக்கொடிதோற்று ஆபரணந்தான்தோற்று
சேலைப்பணிகளுடன் சேரவவர்தோற்று
ஆயிரங்கோடிவெள்ளை யானைகளைத்தோற்று
நூற்றுக்கோடி அசுவங்களைத்தோற்று
ஆயிரங்கோடி ரப்பையரைத்தோற்று
நாடகசாலைப்பெண்கள் நாயகியதைத்தோற்று
யானைகுதிரைகளை அரசரவர்தோற்று
சேரஇவர்தோற்று செப்பொனமணிமுடியார்
இத்திலங்குமூமுடியார் நீராழிமண்டபமும
பாலவயுருவதுபோல் பளிங்குமாமண்டபமும்
பேடைமலர்க்கண்ணாள் பேரரசிமண்டபமும்
காவலர்கள்தேவி கதைகேட்குமண்டபமும
தருமமுடிபஞ்சவர் சனிவெண்ணெய்மண்டபமும்
பேர்பெரியபஞ்சவர்கள் புதுவெண்ணெய்மண்டபமும்
செப்புமழகுடைய சிவன்பூசைமண்டபமும்
இவர்கள்பூசைசெய்யும் அரனார்திருமேடை
இத்தனையுந்தோற்று இவ்வளவுமல்லாமல்
வித்தகனார்பஞ்சவர்கள் பெற்றவிளக்கொளியை
கொத்தயர்களபஞ்சவர்கள் கொண்டகுடிவிளக்கை
தாமக்குழலாளை தருமரிடதேவியரை
ஏன்மாதானைவைப்பவைத்து மன்னவர்கள்தோற்றார்கள்
இத்தனையுந்தோற்று இருந்தொருநாளவரை
தேசத்தழுகனவன் திரியோதிரனபாவி
மரவுரியைத்தான்கொடுத்து மன்னவர்களைவரும்

வெய்யவிலேதானிருத்தி வேந்தரானைத்தானே
கோறுவடிவழகி திரௌபதைநாயகத்தை
காமக்குழலாளைத் தன்வீட்டிலேவைத்தான்
வேல்பொருதுங்கண்ணனை வீட்டடக்கவைத்தான்
அன்னநடையாளை அங்கேமாட்டிவைத்தான்
பாவையழகியரை பரக்காட்ட மாட்டிவைத்தான்
சொல்லாதுசொல்லியே துகிலுரியவைத்தான்
பஞ்சவர்கள் புண்ணியத்தால் பாஞ்சாலை புண்ணியத்தால்
தக்கப்புகழுடைய தர்மரிட புண்ணியத்தால்
மாளாதிருந்தது மாதுதுயிலாடை
உரியாதிருந்தது உத்தமியாள்பூவாடை
அழியாதிருந்தது அணைழகிபூவாடை
உழுவிகழுவியதுயில் வுடை குலைதாளாமகில்
வெற்றிமதயானை வீமனுதெண்டாலே
வீமனுதெண்டாலே வேந்தர்படைகளெல்லாம்
மாளுவதுஅன்றல்லோ மன்னன்பெரும்படைகள்
சாகிறதுஅன்றல்லோ தனஞ்செயன்கையம்பாலே
பஞ்சவருக்குளைப்பாறவும் போயிருக்க
எந்தவனத்திலே யிருக்கிறாரென்றறியேன்
எக்காட்டுக்குள்ளே யிருக்கிறாரென்றறியேன்
புன்னையுடன் தம்மை விருப்பமுடன்சாய்கிழக்கு
பனையுடன் தாமரை பறாமையுடன்சாய்கிழக்கு
இன்றுமவர்திரிய தேசாந்திரிபோலே
காடுசெடிதோறும் கடுகிஅவர்திரிய
எனக்குகதியேது என்தாயெனசொல்லுமென்றான்
பிரலாபமடித்த பெண்பெருமாள் கூறுகிறாள்
அதனைக்குப்பீச்சலுக்கு ராமாக்குமாப்பா
என்செய்வேனமகனே யெழுத்தவசந்தப்பாது
தலையின்விதிப்படி தப்பாதிருக்காலும்
பாஞ்சாலிபட்டுரிய பஞ்சவர்கள் நிறைய
உன்வலதுமென்வலதும உத்தமனோவ்வலிது
தெய்வவலதுக்கவர் செயவொணமுடியாரே

புலந்திரனை கலந்தாரியிடஞ்சேர்க்கவாவென்று சொல்லுவது.

உன்மச்சினியாள்மீதி வளர்த்தசமைந்தனாம்
அத்தைமகள்மீதி அலவாசலண்டேறேன்
கண்டேனதனவிலே கட்டழகிசீர்வடிவை
மச்சினியாள்கோசிறுக்கு மகனதுசொல்லுமென்றான்
பொற்கொடியாள்கோவிலுக்கு பெய்யுருவாபுலந்திரனே

புலந்திரன்மறுத்துச்சொல்வது.

போராஞ்சாமன்னன் புலந்திரன்கூறலுற்றான்

பகைவனரண்மனைக்குப் பாவியுடவாசலிலே
சகுனிபடுபாவி சத்துருவின்வாசலிலே
ஊனதாயைத்துகிலுரிந்த சண்டாளன் வாசலிலே
கோதைதுகிலுரிந்த கொடும்பாவிவாசலிலே
மாதுபொருட்டால் வனவிலும்போனேனே
பஞ்சவர்நம்நாடுபெற்று காருப்பயந்தெளிந்து
கொற்றவரும்நாடுபெற்று காமுபகுறைநீங்கி
மன்னவர்கள்நாடுபெற்று வந்தபிறகாக
வண்டார்குழலுடையான் வந்திருப்பிற்பாடு
அன்னநடையென்னுடைய தாய்வந்தபிற்பாடு
பொற்கொடியாள்வாசலுக்குப் போவேன்காணுச்சியரே
இப்போதுபோவதில்லை யென்றாயே யொன்றுரைக்கார்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியவளேதுரைப்பாள்
தோளுக்குத்தோளு துணையேவனுந்தம்பியரே
காலத்திற்பெற்றபிள்ளை கைக்குதவுங்கண்டீரோ
போனீரேயாமாகில் புத்திரனைப்பெற்றிடுவீர்
பெற்றீரேயாமாகில் பேருண்டாய்வாழ்ந்திடுவீர்
பொற்கொடியாளரண்மனைக்கு போவீர்புலந்திரரே
போரஞ்சாமன்னன புலந்திரனுங்கூறலுற்றான்
எனக்குமோராயாண்டு வந்திழையாளுமோராண்டு
மாலையிட்டபிற்பாடு மாதுஅறியாளே
தையலர்க்குமங்கிலியந் தரித்தவனையானறியேன்
என்னையவளும் வந்திழையாளானறியாள்
நானும்வளர்ந்தது நாயகியுந்தானறியாள்
ஊடையவர்வீட்டை மறுபடியும்போனதில்லை
மாமியார்வீட்டிலே மறுவுணவுண்டதில்லை
பொற்கொடியாள்வாசலுக்குப் போகும்வகைசொல்லுமென்றான்

பிள்ளைபீதிலேபரிதவ விலங்குபோடச்சொல்லுவது.

அரசாளும்நாயகியாள் அல்லியரசாள்கேட்டு
சீரியதிறந்து செவ்வாயசைவிட்டு
காதிற்றரித்திராக்குப்பேசுவதும் என்னுடன்சொல்லுவதும்
மதுக்குத்தடு ஒருப் மனுசருவமென்ன
இந்தருவத்தை யிப்போதடக்குவென்பார்
கட்டழகிதாதியரே கருமாலையழையுமென்றாள்
இருபதோர்தண்டகனை விலங்கிடவேபோடுமென்றாள்
கால்விலங்கு கைவிலங்கு கழுட்டவொண்ணா பெருவிலங்கு
மார்விலங்குதோள்விலங்கு மன்னனுக்குப்போடுமென்றாள்

புலந்திரன் சொல்வது.

போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறலுற்றான்
என்னைவிலங்குபோடவெண்ணஞ்செய்ததென்னதாயே
போகாதஅரண்மனைக்கு பொற்கொடியேபோனேனே

மக்களையர்கள்கோவிலுக்கு மறவினாற்போனேனோ
குடிமக்கள் வாசலிலே கூசாமல்போனேனோ
உப்பரிகைமேலிருக்கும் உயரக்குதித்தேனோ
கப்பல்கள்சேர்க்குதான் களவுக்கொசெய்தேனோ
என்னகொடுமை செய்தேன் என்னைவிலக்கிவிட
அரசாளும்மாயவர்கள் அவ்விடமுங்கூறினான்
ஆடாதப்பிடாமே அவ்விவன் குறையாது
அக்கினிபுத்திரனாம் அரசேசர்கேட்டருள்வீர்
மச்சினியாள்பிறி வளர்ந்தமனைக்கிருக்க
மாதுகிளைதலிருக்க மன்னவனிலையாகாது
குடியாள்கிளைதலிருக்க கொற்றவனையாகாது
கயெமகாராஜமன்னு கருணையமேருகு
வருமாவராஜன்மர் உத்தமனைபுக்கனுக்கு
மச்சினியாள் கோவிலுக்கு மனிவீசெல்லுமென்றான்
போரஞ்சாமன்னன் புலந்திரனைகூறினான்
உன் அக்கினிக்குத்தாயடைத்த ஆசைபெரேபோனாலும்
அவகைக்கோட்டைமூடித்திரையும் கர்லவிடமாகளும்
சத்திரமதிலெழுப்பி குர்மனைகாளும்
பக்கமதிலெழுப்பி பலவாணகாளும்
வாசலுக்குகுலிரம்பேர் வால்வீரர்காவலுக்குள்
உருவின ஆயுதங்கள் வரைவிலேபோடாமல்
விழித்தகண்மூடாமல் வெள்விடமிருப்பார்
காவலைமாடாகும் காவலதிகாரவ
ராமக்குழுவானின தலைவாசல்காப்பாளும்
அக்கினிபுத்திரன்கடந்து ஆசைபெரேபோனாலும்
ஆயிரக்கதி அவனுடையிருப்பாராம்
அம்பாரிராக ஆடுகெழுலாட
விளையாடவீற்றிருப்பார் வெகுவிபாரமிருப்பேர்
பொற்கொடியாள்மன்மனைக்குப் போகுமனசெய்யுமென்றார்
அரசாளும்மாயவன் அவன்மறுபேதுசொல்வான்
ஆறுமதியாதே அம்மனைக்காணுதே
அறுசிறுக்குத்தோழியர் யாருமறியாமல்
மாதிவிடவாசலிலே மனைவழியேபோவீர்
மேசப்புரவித்த வெக்கமெலாயதருமவை
என்னுடையமன்னுநீ இனிபொன்றுதுசொல்லாதே
மன்னுநீபேசாதே மன்னர்பெருமானே
தருமர்திருவாளை தம்பிமார்களுவினை
கடுமைதந்தபஞ்சவர் பட்டமுர்களுவினை
பின்னவபெற்றஞ்சொல்லாதே பெருமாள்புலந்திரனே
மச்சினியாள் கோவிலுக்கு மனமுகீசெல்லுமென்றான்
போரஞ்சாமன்னன் புலந்திரனுமேதுசொல்வான்

அவர்-எந்தவனத்தில் இருக்கிறரென்றறியேன்
இதுவொருகாரியமாய் இவ்வண்ணம் வந்த தன்னை
மானவென்றுசொல்லுகிறேன் மாதாவே யிப்போது
ஆணைவிடச்சொல்லவென்று அடிபணிந்தெண்டனிட்டான்
வந்துபணிந்தவரை வாளாலேதாவெடுத்து
ஆணைமுகர்பஞ்சவர்கள் ஐவரிடமாணைவிட்டேன்
கடுமையறந்தபாஞ்சாலி கட்டழகியாணைவிட்டேன்
தருமருடனாணைவிட்டேன் தம்பிமார் ஆணைவிட்டேன்
மாதருடனேகூடி மருவிவருமளவும்
என்னுடனேகட்டும் இருக்கட்டுமிந்திரனை
என்றுமங்குரைக்க விசயனுடனேதானேகேட்டு
கைகாலைப்பார்த்து மலர்தூவித்தெண்டனிட்டு
செம்பொனைக்குத்தெண்டனிட்டு கூறுமாணிக்கமாலும்
உம்மானைகொண்டுபோன ஊர்வழியேபோமென்று
தாயானைகொண்டுபோன் தனிவழியேபோமென்று
போனவுடனேக்குதேயா பொறுபொடிவேவெங்களுக்கு
ஆணைவிடுமென்று அடிபணிந்தெண்டனிட்டான்
அரசாளுமகாராசன் அல்லியுந்தானேகேட்டு
விட்டேனையானைவெல்லாம் வேந்தர்பெருமானே

அல்லி இந்திரனைக்குறித்துப் புரவிவாங்குவது

ஆகாயவாண்புரவி அழைப்பிக்கத்தானேதருவேன்
இந்திரரேநீரும் இங்கேவிருமென்றுசொல்லி
கட்டழகிசபியுமகாவலின்மேல் பாசபுருந்து
அழுச்சனைவிட ஆச்சியருந்தானிறங்கி
காலோடுகண்ணுங் கனிவாயுங்கொப்பளித்து
வாயோடுபல்லுமதிமுகஞ்சுத்திசெய்து
செக்கமதுரைநாடாளும் திருநீறுங்காப்பணிந்து
சிந்தித்துநின்றுமே சிவனேயடிபணிந்து
தேவேந்திரனை நினைத்துத்தெண்டனிட்டாள்
மைந்தர்புலந்திரனு வாண்புரவிமேனுமென்று
மைந்தனுக்குச்சகாயமாய் வாமனைகளேனுமென்று
ஆகாயவாணபுரவி யானைக்குவேண்டுமென்று
இந்திரரைநோக்கி வந்திமையுந்தெண்டனிட்டாள்
மருமகள்தானிளைக்க மனைமருந்தானேகேட்டு
தேவேந்திரருந்தானே தேவிமுகம்நோக்கி
கண்டாயோபெண்ணரசே கயற்கண்ணாள்நின்றவிதம்
தன்-மைந்தருக்குமைந்தருமாய் வாய்க்கவேவேண்டுமென்று
புத்திரற்குப்புத்திரனாய்ப் பிறக்கவேவேண்டுமென்று
தவஞ்செய்கிறுன் தையலினம்பிறையாள்
என்றுரைக்கஇந்திரனுர் இந்திராணிதானேகேட்டு
தென்காய்க்குழுனாறுகண் தேசத்திலென்பார்கள்

ஓடுமயில்கண்ணாட்கு ஒருகண்ணேயுள்ளதுவும்
தோளுக்குத்தோளு துணைவேண்டுமிந்திரரே
அதனாலேயல்லவோ யாரணங்கூருக்கிருள்
ஆகாயவான்புரவி அனுப்பவேவேண்டுமென்றாள்

தேவேந்திரன் புரவிகொடுத்தது.

தேவேந்திரபகவான் சிரித்துமகிழ்ந்து
வானத்துமேகங்கள் வாணவர்கோன் வரவழைத்து
பார்த்தானேயிந்திரனும் பாவைகள்கொள்ளாதே
இப்படிக்குபோனாலே இந்திரர்க்குவர்க்காது
என்றுஇவர்நினைத்து இன்பமுள்ளபேரனுக்கு
பூமியில்வாழுகிற புரவியைப்போல்சோடித்து
அங்குபடிவைத்தல்லோ அழகாயலங்கரித்து
நாலுகால்வண்டயமாம் நடுக்கழுத்திற்கொலுசுகளாம்
செம்பொன்சிறுசதங்கை சேர்த்தபலகரையும்
அம்பொன்மணிகிண்கிணியும் அழகாகப்பூட்டினராய்
மாணிக்கதண்டையும் வைடூரியந்தண்டையும்
நெற்றிக்குசுட்டிகட்டி கோர்விழிக்குமையெழுதி
மெத்தைபடித்திட்டு மேலேமணைகோலி
சித்திரஞ்சேர்பட்டு சிராய்மடித்துவிட்டு
குப்பியில்சாந்துகளும் குழாவிப்புனுகுகளும்
வாய்த்தயிலச்சருளும் வர்ணப்பலநகையும்
தட்டுப்புனுகுகளும சவ்வாதுபரிமளங்கள்
பூவாலலங்கரிததார் புலந்திரனார்புரவிதனை
வகைவகையாய்ப்பூச்சரங்கள் வைத்துப்புரவியிலே
சோடித்தலங்கரித்து சுந்தரற்குவேண்டுமென்று
தேவேந்திரபகவான் சிரித்துஅலங்கரித்து
ஏற்குமோயிப்புரவி இந்திரற்குஏற்குமென்று
தட்டிப்புரவியைத் தாமந்தவாழ்மார்பன்
குதிரைக்குபதேசங் கூறினார்காதிலேதான்
ஆகாயம்போகாதே அவலோகம்போகாதே
செம்பொன்மணிமுடியாளை தேவியுடகோவிலுக்கு
ஒருசாமபொழுதிலே இருக்குமட்டுந்தானிருந்து
இருசாமமங்கே இருக்குமட்டுந்தானிருந்து
விடியவொருசாமத்திலே விடுபட்டுவந்துவிடு
அப்போதுவான்புரவி அவருடனேசொல்லுகுது
அருளருளும்ஐயாவே அப்படியேயாகுதென்று
வந்ததுகாண்புரவி மதுரைவளநாட்டிற்கு
செம்பொன்கடிவாளம் தென்னுகைப்பிடித்து
மலர்க்காவிதான்கடந்து வைவையவளநாடியரும்
மைந்தனிருக்கிறதோர் மண்டபஞ்சென்றேறினான்

புலந்திரனை அலங்கரித்தது.

மாலைமுடியானை மஞ்சனமாடுமென்றாள்
மஞ்சனீர்சாலையிலே மன்னவனுமப்போய்புகுந்து
ஆடைகளைந்துவைத்து ஆபரணந்தானைகழற்றி
கத்தியுடனே ஆங்கே காலனுந்தான்கழற்றி
சேலைதான்கழற்றி செம்பொன்மணிமுடியான்
கொற்றவர்களசேனாளும் குளிக்குநீரைப்பதினன்
தப்பட்டிக்கொண்டு துவட்டினார்சுந்தரியார்
சாமுலானை பின்னைகளைவீசினார்கள்
ஆடையெடுத்துடுத்தி ஆபரணந்தான்பூட்டி
கச்சைவரிந்துகட்டி கத்தியைச்சொருகி
தென்னவல்புலிவேந்தன் திருநீற்றுக்காப்பணிந்து
சிந்தித்துநின்று சிவனையடிபணிந்து
செங்கழுநீர்பூவெடுத்து சிவனுமைதோத்தரித்து
கஸ்தூரிபொட்டுமிட்டு கண்டபெண்கள்சேர்ந்திடவே
மாணிக்கமண்டபத்தில் மன்னவனுஞ்சென்றுமே
சிங்காதனத்திலே சிரன்கிரன்வீற்றிருந்தான்
அரசாளுநாயகியாள் அல்லியருங்கூறுகிறாள்
மைந்தர்புலந்திரனை மயிலனையாள்தான்பார்த்து
ஆனந்தவாழ்மார்பா அடிசலுக்குவாருமென்றாள்
சிங்காதனத்தைவிட்டு சிகழுக்குநீக்கிறங்கி
அமுதுண்ணுமண்டபத்தை ஆணழகன்சென்றானே
அரசாளுநாயகியாள் அல்லியருங்கூறலுற்றாள்
இருமிருமென்று பின்னைகடைகண்ணையமர்த்தி
பொற்றவிக்குமேலே புலந்திரனும்வீற்றிருந்தான்
சிங்கமுகக்காலி செம்பொற்றளிகைவைத்தாள்
கைக்குநீர்வைத்தான் காவலனார்கிரியற்கு
நீர்கழும்பியூற்றி சேர்ந்தனமுடனையாளும்
பொன்னகம்வாங்கி புரிகுழலாள்தான்படைத்தாள்
பத்துவகைக்கறியும் பதினெட்டுபச்சடியும்
நீர்கடக்கன்னியாள் நீசெரித்துதான்கொடுத்தாள்
அறிவுடையநாயகர்க்கு ஆகாரந்தான்கொடுத்தாள்
அந்தவடிசல் அமுதுண்ணபிற்பாடு
அத்தளிகைமாற்றி பொற்றளிகைமுன்னேவைத்து
போனகம்வாங்கி புரிகுழலாள்தான்படைத்து
சக்கியபாலும் காட்டுமாங்கனிப்பழமும்
திருத்தியமுதுந் தெளுத்தியகொப்பாலும்
கூட்டிப்படைத்தார்கள் கொப்பனைமார்தாதியர்கள்
அந்தஅடிசல் அமுதுண்டபிற்பாடு
கைகழுவநீர்வார்த்தார் காரிகையார்தாதியர்கள்

உத்தமியுமைந்தனுமாய் ஒராவுலாகொடுத்து
சித்திரஞ்சேர்மண்டபத்தில் தேனமொழியாள்வீற்றிருந்தாள்
முடிப்பூவுஞ்சந்தனமும் மெல்லியருந்தானவாங்கி
அடைக்காயும்வெள்ளிலையும் அன்பாகத்தான்வாங்கி
மைந்தருக்குத்தான்கொடுத்து மாதுநல்லாளப்பொழுது
தானுமிலையமிர்தம் தையலருந்தின்றாளே
மாதாயினப்பாற வான்கவுரிவாங்கினாள்
தாமக்கருங்குழலாள் தாதிமுகம்நோக்கி
கொண்டுவந்துபூட்டுமென்றாள் குமாரன்புலந்திரற்கு
மச்சினியாள்மெச்ச வகைவகையாய்ப்பூஷணங்கள்
ஆபரணப்பேழை அலங்கோதிதான் திறந்து
ஆனந்தமார்பனுக்கு ஆபரணந்தானெடுத்து
தெரிந்தபணிதனை செம்பொற்றளிகைவைத்து
கொண்டுவந்துமுன்னேவைத்தாள் கொம்பேரிடையாளும்
தென்னர்பெருமான் திருமேனிதீண்டவல்லான்
ஆனந்தமார்பனுக்கு அருகாகவந்திருந்து
முதலினுருமாலை முகமறையத்தானறித்து
வேதிச்சகரபுனுகால் மின்னமுகந்துடைத்து
கட்டழகர்நெற்றிமேல் கஸ்தூரிப்பொட்டுமிட்டு
தேனல்லோதாரன் திருநீற்றுக்காப்புமிட்டு
ஈரொட்டுப்பூண்கடுக்கன் யிட்டுமிலைகாதில்
அணைந்தமுடிசூட்டி அழகாகப்பூட்டினார்
ஒருமுத்தேகமுத்து உலகமெல்லாம்பெற்றதுபோல்
பரியமுத்துப் பரிமுத்துத்தாழ்வடமும்
நவரத்னப்பதக்கம் நாகரீகத்தாழ்வடமும்
ஆரப்பதக்கமும் அழகுசரப்பணியும்
பார்த்தபணித்திரமும் பருமுத்துத்தாழ்வடமும்
முன்கைமுதாரிகளு முழுகடகமோதிரமும்
சந்திரகடகங்கள் தாயித்திசோதியின்ன
அஸ்தகடகமும் அழகானமோதிரமும்
முத்திரைமோதிரமும் முனைகைரிற்கடகமும்
செம்பொன்பவுத்திரமும் சேர்ந்தகணையாழிகளும்
பொன்னினரைஞாணும் பூட்டினாற்பொற்சலங்கை
கச்சையிறுகவணைந்து கததிமிகச்சொருகி
பாங்குகள்தான்சொருகி பாவனிடதனில்
பூஞ்சிலம்புந்தண்டையும் பொன்விட்டேந்தானணிந்து
ஆபரணமெல்லாம அடங்கலுந்தான்பூட்டி
இமையாயிரம்பொன்பெற்ற இந்திரவர்ணப்பச்சைவடம்
ஆனந்தமார்பனுக்கு ஆடைவரிந்துகட்டி
நிரஞ்சனமாகவே நிறமதொருமேனியெல்லாம்
இந்தப்படியாக வியலாயலங்கரித்து

அரசாளுந்நாயகியாள் அல்லிபெருங்கூறலுற்றாள்
மைந்தர்புலந்திரனைப் பார்த்தவளாடி
கண்திருஷ்டிவாராமற் காப்பிடுங்கள்தாதியென்றாள்
சந்தனமுஞ்சாந்தும் சவ்வாதுமிகவணிந்து
ஆலாத்திகாட்டுமென்றாள் ஆனைதமார்பனுக்கு
மூத்தார்மேலாலாத்தி முப்பதுநூறாயிரம்பேர்

புலந்திரனுக்குத் தாயார்புத்திசொல்வது.

ஆகாயவாண்புரவி அதிதாரமேறி
ஒருசாமப்பொழுதிலே உத்தமனேநீர்போய்
மந்திரவாள்தாரேன் மன்னர்பெருமானே
வாள்வைத்தால்கதவு திறக்குங்காண் மன்னவனே
தாளைத்திறக்குங்காண் தனஞ்சொர்ணபொற்கதவு
போனதற்போலேநீரும் பொற்கொடியையெழுப்பாதே
அறியத்துபார்த்து ஆனைமுகமன்னவனே
கையாலேதட்டிக் காரிகையையெழுப்பாமல்
காலாலேதட்டி மங்கையரையெழுப்பும்
சற்றேதான்தட்டினமே தையலெழுந்திருப்பாள்
அவள்வாழும்பெருமைக்கு மாமன்னர்சேவகரும்
உத்தமர்களபஞ்சவனார் ஒருபுயராசாளுமவனும்
கட்டழகர்பஞ்சவனார் காசேலாட்டியாளுமவனும்
கர்ணனிடவதிகாரம் காவலர்போர்வீரியமும்
வசாதும்மேதிபெதித்துவைப்பாளாமாகில்
உத்தமர்கள்சொல்லாதே தக்கதின்றுபேசாதே
கொற்றவனையுந்தனக்கு கோபஞ்சன்னமாமல்
அத்தனைக்குமுட்கொடுத்து அரிகாரநீர்கேட்டு
எத்தனைசொன்னாலும் எனக்காகநீர்பொறுத்து
அன்னமேமயிலேகோவிலார்கோவில்சொல்லுமென்று
ஆனந்தேகயுமுனைடைய ஆய்ச்சியபேர்சொல்லுமென்று
மங்கையரேயுமுனைடைய மாமன்பேர்சொல்லுமென்று
அன்னமேயுனதுடைய ஐயன்பெயர்சொல்லுமென்று
மங்கைகள்ளொளிதன் பெருமணவாளன்றனைப்பேரும்
ஆழமூலியாள் அடையாளஞ்சொல்லுமென்று
இருப அடையாளம் மேரிமைக்குதானேகொடுக்க
தாரேனடையாளம் தையலுக்குக்கொடுத்தா

அடையாளங்கொடுத்தது.

அல்லிக்கொடியும் அழுத்தியசிராவும்
சிராவுங்கங்கணமும் இருமுடியுந்தான்கொடுத்தாள்
உன்மாமியாரிட்ட உருபவுத்திரந்தான்கொடுத்தாள்
வாங்கிமுடித்துக்கொண்டார் மன்னர்பெருமானும்
மாதாஅடையாளம் வைத்தானமடிதனிலே

அரசாளும்நாயகியாள் அல்லியருங்கூறுகிறாள்
அரும்பாவிவாசலிலே அமிர்தம்படியாதே
கஸ்தூரிபூசாதே கபடனதுவாசலிலே
தண்ணீர்குடியாதே தையலதுவாசலிலே
கொப்பளித்துநீரைக் குடியாதேவருமென்றாள்
இருந்துஒருசாமம் எந்திழையைக்கூடி
வாவொருசாமத்தில் வந்துவிடுமென்றாளே
அருளருளுமென்றுமே அப்படியேயாகுமென்றார்
போகவிடைதாருமென்று புலந்திரனுந்தெண்டனிட்டு
வந்துபணிந்தொரு மகனைவாழ்த்தலுற்றாள்
நீயேஅரசாள்வீர் நீடூழிகாலமெல்லாம்
என்னைப்பெறுவீர் எதிர்த்தார் முடிபெறுவீர்
பிள்ளைபெறுவீர் பெருயானைப்போல்வாழ்வீர்
வாழ்ந்திடுவீரென்று மனங்குளிரவாழ்த்தினாள்
தேனல்லாதாரனுக்கு திருநீருங்காப்புக்கொடுத்தாள்
வாய்த்தயிலைச்சுருளும் வாணபழுக்காயும்
காவலன்வீரியற்கு கைநிறைய அள்ளியிட்டாள்

புரவியின் மகிமைசொல்வது.

ஆதினம்விட்டிறங்கி அன்னநடையாளும்
மாதாமுன்னடக்க மைந்தருபின்னடக்க
சிங்காரத்தோட்டத்தில் சென்றாள் திருவனையும்
வாணபுரவிதான்பிடித்து வையகவளநாட்டியரும
செம்பொன்னாற்கடிவாளம் தெனனுங்கைபிடித்து
மைந்தர்புலந்திரனை வளநாடிரனைபார்த்து
பூமியிலேவாழுகிற புரவியைப்போலெண்ணாதே
வையாளிபுரவியோடி வருவதெல்லாங்கண்டீரோ
கடிவாளங்கைவிடாதே கட்டழகாகற்பகமே
அங்குபடிகால்விடாதே ஆணழகாமன்னவனே
மாலைமுடியானே வழிபிடித்துவாருமென்றார்
மச்சினியைக்கண்டபின்பு வாருமலிருக்காதே
வேந்தர்பெருமானே விடியவிங்கேவாருமென்றார்
அருளருளுமென்னுச்சி அப்படியேயாகுதென்றார்

புலந்திரன் புரவிமேல் நடப்பது.

மறுபடியுந்தெண்டனிட்டான் மாதாவின்சீர்பாதம்
புரவியைச்சுற்றிவந்து போகசலாம்வாங்கினானே
அங்குபடிகால்வைத்து ஆனந்தவாழ்மார்பன்
உத்தமர்கள்புத்திரனும உதாரிச்சேறினானே
எறினதுகண்டாளே யிந்திரரைக்காணாமல்
பிள்ளையிவள்காணுளே பெருமாள்புலந்திரரை

ஆகாயமாகவே அப்புறவிதான்பறக்க
அந்தரமார்க்கத்தில் அப்புறவியெழும்பினதே

அல்லியம்மாள் புலம்பல்.

மைந்தரைப்போகவிட்டு வாடிமனந்தளர்ந்தாள்
போகமாட்டேனென்றானே விஜயனான் போகவிட்டேன்
கர்ணனிருந்தாரே காவலர்கள் கண்டாரே
தூலாலகமிந்திரனார் நூற்றொருவர் கண்டாரே
மாலைமுடியானை வதைசெய்தாராமாயின்
மாறும்படியொழிய மண்ணிலிருப்பதில்லை
பஞ்சவருக்கென்னசொல்வேன் பாஞ்சாலிக்கென்னசொல்வேன்
வெற்றியசயானை வீமருக்கென்னசொல்வேன்
அங்கவர்க்கென்னசொல்வேனருச்சுனருக்கென்னசொல்வேன்
சோலைமலருடைய சொக்கர் லீலைசெய்ததெல்லாம்
அவரிட்டகலகமல்லோ யாருடன் தகராறுவேன்

அல்லி சொக்கநாதர் கோவிலுக்குவந்தது.

தன்படைகதானிருக்க தையலருந்தானிருக்க
தானுவழிநடந்து தையலரும்மங்கேராம்
சோலைமலருடைய சொக்கரிடகோவில்வந்து
முக்காலவம்வந்து முடிவணங்கிதெண்டனிட்டாள்
மைந்தர்புலந்திரற்கு வாட்டங்களில்லாமல்
மன்னர்புலந்திரனார் வந்தாரேயாமாகில்
ஆலாத்திப்பெண்கள் அதிசயமாய்க்கொண்டுவேன்
மாடைவராகனு மாணிக்கத்தினாலும்
செம்பொன்னின்முத்துக்களுஞ் சுவாமிக்கோரணிப்பேன்
தண்டிவந்தபொன்னையெல்லாம் சங்கரனுக்கீந்திடுவேன்
கொண்டுவந்தானைசொரிவேன் கோபுரவாசலிலே
மைந்தர்புலந்திரர்க்கு வல்வினையில்லையென்று
இம்முடியில்புஷ்பமது சேரவேதள்ளுமென்றார்

சொக்கர் மீனாட்சியைநோக்கிச் சொல்வது.

சோலைமலருடைய சொக்கருந்தான்பார்த்து
அங்கயற்கண்ணுமையை அரனுந்தான்பார்த்து
கண்டாயேமாதே கயற்கண்ணுள்நின்றவளே
எத்தனைகோபட்டும் இவள்கெஞ்சுகின்றாள்
பொற்கொடிமாதருக்குப் புஷ்பங்கள்கொடுப்பதில்லை
அங்கையற்கண்ணுமையாளவர்முகத்தைதான்பார்த்து
கல்லோருக்குக்கண்கள் இரண்டென்பார் சாஸ்திரத்தில்
தேங்காய்க்குக்கண்மூன்று தேசத்திலென்பார்கள்
ஓடமலர்கண்ணுட்கு ஒருகண்ணேயுள்ளதுகாண்
பிரந்துகன்னியாளுக்கு பிள்ளைதலைவேனும்
அதனால்வருந்துகிறாள் காரணங்களின்னேயா
பொற்கொடியாள்மாதருக்குப் புஷ்பமதுகொடுமென்ன

சங்காருமப்போது சற்றேநகைநகைத்து
சங்கைபரிதாபங் தையலேரகண்டாயோ
வெட்டுவேன்குத்துவேன் விலங்கிடுவேனென்றுசொல்லி
ஆக்கினைகள்செய்து அவளையிவன் போகவிட்டாள்
எத்தனைநேரமட்டும் இவள்கெஞ்சிநின்றாலும்
பொய்கைவளநாடியற்குப் புஷ்பங்கள்கொடுப்பதில்லை

மீனாட்சி சொக்கருக்குச் சொல்வது.

அங்கையற்கண்ணம்மை ஆசனத்தைவிட்டிறங்கி
மகாதேவர்பாதமது வணங்கித்தெண்டனிட்டு
அங்கையற்கண்ணம்மை அருகில்வந்தேதனைசொல்வாள்
ஆராயிரவர்களும் அணிதிரளாம்பாண்டியர்கள்
மாளுவோமென்று மலைமேல்தவமிருந்தார்
மாளாதேயென்று மலரிலவதரித்தாள்
வீருகச்செங்கோல் செல்விசெலுத்திநின்றாள்
மன்னன்விஜயன் மடலூர்த்தமாதேவி
காளைவிஜயனார் கட்டழகன்தேவியிவள்
சிறுவிரல்பாதம்ரெண்டும் சிலம்புக்கால்கொப்பளிக்க
செண்பகப்புமெல்லடிகள் திருவிளைக்குத்தாளேக
எத்தனைநேரமட்டாய் இளங்கொடியாள்கெஞ்சிநிற்க
இப்படிக்குநீரிருக்க யிதுவுமக்குத்தருமமல்ல
பொற்கொடிமாதுக்கும் புஷ்பமதுகொடுத்தால்
சந்தோஷமாயிடுவாள் தருமமுடியழகி
சங்கமருமப்போது தயவாய்மனமிறங்கி
சிவனருமப்பொழுது திருமுடியைத்தானசைக்க
எலங்குழலாளும் இருகையுந்தானிறைய
வாங்கிமடியில்வைத்தாள் மதுரைவளநாடியரும்

சொக்கர்பின்னைக்குத் துணைபோனது.

சொக்கருங்கூட துணைபோகவேண்டுமென்றாள்
சிவனருமப்போது தே முகம்நோக்கி
ஆரமுலையாளே ஆளடிமையானேமே
அது-சந்தேகமென்று சங்கரியுந்தானசிரித்தாள்
சொக்கருங்கூடத் துணையாகத்தானபோனார்
சந்நிதியைவிட்டுச் சுவாமியவர்போனார்
தீர்த்தமும்திருநீரும் திருமாலைச்சந்தனமும்
கொண்டெதிரேதந்தார்கள் கொம்பேரிடையாட்கு
தீர்த்தம்தெளித்தார்கள் திருநீற்றுக்காப்பணிந்தார்

அல்லிக் கொலுவுக்குவந்தது.

சந்நிதியைவிட்டுத் தையலருந்தானகர்ந்தாள்
படித்துறையுந்தான்கடந்து பாண்டிவளநாட்டாளும்

கோபுரவாசல் கொம்பனையுந்தான்கடந்து
தென்னந்தெருவும் தேரோடுவீதிவிட்டு
மன்னர்தெருவுகளும் மாடோடும்வீதிவிட்டு
வாசற்படிகடந்து மண்டபஞ்சென்றேறினாள்
நாமக்கருங்குழலாள் தாதியெதிரேவந்து
காலுக்குநீர்கொண்டு காரிகைமாரோடிவந்தார்
கோவிலுக்குப்போய்வந்தேன் கொம்பனையேதாதிகளே
இதகெள்ளாயப்போலவேவந்தேன் ஏலக்குழலாளே
பாவையழகியரும் பள்ளியறைபோய்புகுந்தாள்
தாழ்வணையில் சகொடுத்து தையலருவீற்றிருந்தாள்
அணைமருங்குறையுடையார் ஆயிரம்பேர்ஒடிவர
அத்தனைபெண்களையும் அனுப்பிவிடைகொடுத்து
மெல்லியர்களெல்லாம் விடைபெற்றுப்போனபின்பு
மங்கையருப்பள்ளிகொண்டாள் மாணிக்கமெத்தையிலே
விடிந்துவருவாரோ வேந்தனையுங்காணபேறு
வெல்பொருக்கண்ணுள் விசனமாய்ப்பள்ளிகொண்டாள்

புலந்திரன் புரவிமேற்போனது.

அக்கொடியிந்திரனார் ஆகாயமார்க்கத்திலே
ஆகாயமாய்ப்பறந்து ஆணழகன்வான்புரவி
மதுராபுரிகடந்து மைவளகாடுவிட்டு
வனமாய்வனங்கடந்து மலைகுகைகள்தான்கடந்து
கடல்வளநாடு குலவீரன்மலைகடந்து

தருமாபுரங் காண்கிறது.

தாமரைசூழ்அல்லிமகன் தர்மாபுரங்கிட்டினனே
அந்தப்புரத்தை அறிந்தானவதாரன்
எட்டுத்திசையுந்தோப்பும் எதிர்மலர்க்காவுகளும்
நாற்றிசையுந்தோப்பும் நானமலர்க்காவுகளும்
கொண்டாடிப்பூக்குமந்த குங்குமவெண்டாடை
நெடுநீலங்கொல்லையில் நீலவர்ணகஸ்தூரி
பூமாங்கனத்தையும் பூத்துச்சொரிந்ததுவே
மந்தாரைபுன்னைகளும் மருவோடிருவாட்சி
மல்லிகைமுல்லை வாய்த்ததொருசெண்பகமும்
வரிமுகின்றபின்னைமரம் மாதுளம்பூவாசனையும்
திருவழகுஞ்சோலையும் தெய்வலோகம்போல்
கண்டான்புலந்திரனுங் கண்கள்ரெண்டுங்கொள்ளாதே
இந்தக்கட்டடையும் இளமையன்றுபார்த்து
இப்பெரியகோட்டைவிட்டு எங்கொளித்தாரையன்மார்
எந்தவனங்காடுறைந்தார் எவனுடையிலேயன்மார்
மாயத்தால்சூதாடி மண்ணிழந்தார்பாண்டவர்கள்
கட்டழகனிந்திரனும் கண்களால்முத்துதிர்த்தான்

பூமாங்கனத் தனிலும் புலந்திரன்தான் பார்த்து
பஞ்சவர்கள் கோபுரமும் பார்த்தன் திருமகனும்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
வண்டார் குழலாளும் [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
காவல்கள் பாண்டவர் [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
பாழாயிருக்குதையா பட்டணங்களத்தனையும்
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
ஆளுவார் பாண்டவர்கள் [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அப்பால் திரும்பி [illegible]
அக்காட்டில் இருக்கும் [illegible]

மாணிக்கமேடையுமே மணிதூக்குமேடையும்
சித்ரமேடைக்கூடங்களும் சிறந்தபுலி ஓட்டுமாடங்களும்
காட்டாமேடைக்கூடங்களும் காவல்புலிச்சிங்காசனங்களும்
பாடிப்பாடுங்கூடங்களும் பஞ்சவர்ணக்கிளிகளும்
ஐந்துநிலைக்கோபுரமும் ஐவர்திருமாடத்து
மாணிக்கமின்னலையே மணிவிளக்கொளிகொண்டிலங்கு
மூத்தமுடிமன்னன் முன்னையிலே நாடுகண்
மகாவிருக்ஷத்தையும் வச்சிரதிரேகண்டது
வச்சிரதிரேகண்டதை மன்னவனுங்கண்பார்த்து
போராசவீரன் புலந்திரனுங்கூறுகிறான்
கண்ணையாரிருக்கிற்கள் கிருஷ்ணராவிக்கிடத்தில்
பாண்டவர்கள் போனதிப்ப பாவியர்காய்போனாமோ தா
தாயாதிவாசலிலே சந்திரவனவாசலிலே
பனைகாளிவாசலிலே பாவியர்தழுணமக்களோ
கான்ஜூயிவருனராக சியலாவிருகமெல்லாம்
மகாவிருக்ஷங்கள்கூறும் மன்னன்முகம்நோக்கி
மாமுடிபாண்டவர்கள் வனவாசம்போனதன்றே
வண்டார்குழலாள் பயிர்விரித்தாள்முதலாய்
மன்னவர்கள்பாசக்கள் வனம்போனநாள்முதலாய்
நாங்கள் -ஜூக்குடியிருப்போம் உத்தமரேயெல்லோரும்
சொக்குமலையிலே குடியுமேனாட்டிலேயும்
அக்கவேசோ யமர்த்திருந்தாரெல்லாரும்
மாமுடிராசரே நீர் வருகிறதேசத்திகண்டு
காணவிருப்பமுடன் காவலரே வந்தோங்காண்
போரசூரவீரன் புலந்திரனுங்கூறலுற்றான்
அவன் -நாட்டியபனைவிரண்டில் நம்பதிக்காணைக்க
மூன்றுவருஷமென்ன முடிமன்னராஜவதும்
அப்பாலேவிமன் அவர்கள் இராமுடிவை
தெண்டித்திரைகொப்பிப்பார் திரிலோதிரன்படையை
சம்மதேதகசெகனம் நமக்குதான்ராச்சியமும்
அந்தசாதிருக்கோலனது அப்புரக்காணடைந்தார்

பாண்டவர்களரண்மனை காண்கிறது.

ஜூவரராசாண்ட அரண்மனையைக்கிட்டினனே
கொற்றவர்கள் தங்களது கொலுக்கூடங்கண்டானே
பாண்டவர்கள் வீற்றிருக்கும் பாமமணிமண்டபத்தே
பொற்றூணும் நற்றூணும் பொரிகையுக்காரமும்
உக்காரமுஞ்சிகாரமும் ஒக்கநிறைகாட்ட
இட்டிருக்குமர்த்தனமும் எழுமணிசிங்காதனமும்
போட்டிருக்குமந்த பொன்னூலேதினமும்
தருமராஜாதினமும் சகலகலைஆதினமும்

வீமராஜ ஆதினமும் விசையனாதினமும்
நகுலராஜ ஆதினமும் சகாதேவராதினமும்
மன்னவர்களாதினத்தில மாற்றானைக்கண்டாலே
தருமராஜ ஆதினத்தில் சண்டாளனானென்றேனே
பாண்டவர்கள் தன்னுடனே பகுத்தரசாளாமல்
பாதி அரசு அவர் பங்கிட்டு ஆளாமல்
எதனாலே காடுறைந்தார் பெண்ணுடைய ஐவர்மார்
தருமத்தைபெண்ணியவர் தாரணியிழந்தார்கள்
புண்ணியத்தையெண்ணியவர் பூமியிழந்தார்கள்
அரண்மனையைப்பார்த்து அழகுபசுமுகந்திர்த்தான்

துரோபதையரண்மனை காண்கிறது.

நேராவடிவழகி துரோபதைதன் வாசலிலே
தையலதுவாசலிலே தங்கப்பொன்னாற்சமைத்து
நாணற்கொடிமுறுக்கி நற்கொடியாள முத்தழகி
பானுஞ்சுடரும் பசும்பொன்னாலேயடித்து
மாணிக்கத்தாலும் வைடூரியத்தாலும்
ஆணிப்பொன்னாலே அழுத்தியசீர்வாசல்
ஆச்சிதலைவாசல்கண்டு ஆனைமுகம்பயரெறிந்து
மாளிகையுமிங்கிருக்க மண்டபமுமிங்கிருக்க
ஆண்டமன்னர்களும் அரண்மனையுமிங்கிருக்க
எழுநூறுகாதியர்கள் இணைகவரிதானவீச
முன்னூறுகாதியர்கள் முறைசெய்துவந்துநிற்க
எதிரிருக்குமந்த பிட்டசிங்காசனமும்
ஆச்சிமாரெல்லோரும் அடியாளையாளவந்தார்
பருகல்உறக்கமே பறபணங்கள்தானுதிர
காடுதலைவிழுக்க கன்னிதுவிகமுன்விழுக்க
காணலிலும்வெய்யலிலுங் கரியனாகிய
எக்காட்டுக்குள்ளே இருக்கிறேனெந்தாபார்
ஆச்சிதலைவாசல்கண்டு அழகுமுகந்திர்த்தான்
இந்திரருமப்போது எங்குமுமேவிழ
கொண்டுபறந்தப்போ குலந்திரனந்தபுரி

புலந்திரன் அந்தபுரங்காண்கிறது.

ஆகாயமார்க்கத்திலே அப்புரந்தான்பறக்க
அந்தபுரங்கண்டாரே ஐவரவர்திருமகனார்
அந்தவனகாட்டை அடுத்ததுஅப்புறம்
அம்பலமோவென்றாலே ஐந்நூறுகாதவழி
இடப்பெரியவாசலது எழுநூறுகாதவழி
அதனுக்குத்தானுமங்கே அத்தாணியாறுநூறுகாதவழி
ஆயிரங்காதவழி அகலமுள்ள அம்பலத்தில்
நானூற்றுக்காதவழி நலம்பெரிய அம்பலத்தில்
மூன்னூற்றுக்காதவழி முத்தனித்தவம்பலத்தில்

பொற்றூணுங் கற்றூணும் பெரிகையுந் தாமும்
குளிர்ந்த சந்தனத் தூணுங் குங்குமக் கற்றூணும்
ஆணிக்குத் தூணும் [illegible]
[illegible] மேற்கட்டு [illegible]
[illegible]
[illegible] காவலன் றன்னம்பலத்தில்
[illegible] தாமரைகளும்
காவிகளுஞ் சோதிவிட [illegible] களும்
வந்துநிழல்காட்டும் மணிமாலைகளும்
வாடாத தாமரையும் வந்துநிழல்காட்ட
முத்துமரகதமும் முழுமணிச்சிலைகளும்
தங்கத்தாற் பலகைகளுஞ் செங்கழுநீர் மாலைகளும்
செம்பொன்னாற் சிலைகளும் செம்பவளத் தூண்களும்
[illegible] சோதிவிட இராசன் அம்பலத்தில்
சித்திரஞ் சேர் [illegible] செம்பவள மாலைகளும்
வந்துபரிமளங்கள் வாசனைகள் தான்வீச
[illegible] வர்ணமணிச் சோதிகளும்
சேரவொட்டியே திகழ்பெரிய அம்பலத்தில்
நின்றவிடக் கோலமாய் நிலைநாட்டிச் சப்ரமஞ்சம்
பார்த்துவிடக் கோலமாய் பக்கங்கள் சேர்விளக்கும்
காடைவிளக்குகளும் கைவிளக்கும் [illegible] விளக்கும்
[illegible] விளக்குகளுஞ் சரவிளக்குகளும்
தருமமுடியார்க்குச் [illegible]
பந்தங்கள் [illegible] பகலைத் [illegible]
பூவர்ணமத்தாப்பும் பெரியபாணந்தான் முழங்க
சத்திசையுந் [illegible] பீட்டிருக்கும் அம்பலத்தில்
ஏறியிருக்கும் [illegible]
வந்திருக்கும் மன்னர் மகாசேனை தன்னுடனே
முப்பத்தாறுகோடி முடிமன்னரிருக்க
கட்டிப்பிடிமன்னவர்கள் வில்லவரையரிருக்க
பட்டக்குதிரைக்காரர் படைமன்னரிருக்க
அத்தியிடிக்குமன்னர் காவலர்களிருக்க
கோடிலட்சங்கோடி கொற்றவர்களிருக்க
சட்டைகழட்டாத சாமந்தரிருக்க
வேதப்பிராமணரும் வைதிகருமிருக்க
பாஞ்சாலமகாராசன் படைகளுமிருக்க
காசிவளநாட்டார் கன்னடதேசிகளும்
அரும்பைசைத் [illegible] சொரியுஞ் சோழன் பரிகலமும்
[illegible] இடும்பன் பரிகலமும்
ஆரங்கவேதமோது அகஸ்தியனார்க்கருளும்
மதுரைபரிகலமும் வளநாட்டுசேனைகளும்

ஏழுலகராசாக்க ளெங்கும்நிறைந்திருந்தார்
தங்கைமணவாளன் தனுதலைபாகமிருந்தான்
தருமமுடியழகன் சகலருமங்கிருந்தார்
முன்னூறுதாதியர்கள் முகத்தினைக்கவரியிட
ஐந்நூறுதாதியர்கள் அஷ்டகவரியிட
எழுநூறுதாதியர்க ளிணைகவரிதான்வீச
பச்சோலைபெண்கள் பரிந்துகவிபாட
மேளவகைகளும் விருதுபலமுழங்க
கவியோர்கவிபாட கட்டியங்களார்பரிக்க
புலவரிருபுறமும் பூவருஷமாய்ச்சொரிய
தேமேத்துமரம்பை கின்னரிகள்வாசிக்க
வீணைகள்கின்னரிகள் வேண்டபடிவாசிக்க
கர்ணன்திருமருங்கில் கட்டியபூச்சரங்கள்
திரியோதிரன்மருங்கில் சென்றுதிமுலாட
திரியோதிரன்பந்தலில் சிறப்பானபூச்சரங்கள்
கர்ணன்திருமருங்கில கண்டுசுழலமிட
அவர்குழலில்மாலை இவர்குழலில்தாவுட
ஏற்பிருந்தார்கள் இருவருஞ்சிங்காதனத்தை
கண்டான்புலந்திரனுங் கண்கள்ரெண்டுங்கொள்ளாதே
பாண்டவர்தன்னுடனே பகுந்தரசாளாமல்
பாதிஅரசுஅவர் பங்கிட்டுஆளாமல்
எதிரேலேகாடுரைந்தார் எனதுடைய ஐயன்மார்
இக்கோடிராசமன்னர் இருக்குமிடமிருக்க
ஐவரந்தபாண்டவர்கள அவர்க்கிடமில்லையென்று
அந்நேரங்காட்டில் அடித்தோட்டிவிட்டானே
சிறக்குமோஇவ்வாழ்வு நிலைக்குமோஇவ்வரசு
இப்பெரியஅம்பலத்தில இருந்தராசர்தங்கள்முன்னே
கட்டழகியென்தாயார் கால்கடையாய்வந்தாளோ
பார்த்துமிருந்தாரோ பாண்டவர்களைவருந்தான்
கண்டுமிருந்தாரோ காவலரைவருந்தான
தக்கப்புகழுடைய தருமராஜ ஆயுதமும
ஏழானைபலமுடைய இபவீமராயுதமும்
ஆறுலமுகுமன்னன் அர்ச்சுனர்கையப்புவில்லும்
நாமக்கொடியுடைய நகுலராஜ ஆயுதமும்
சாஸ்திரகொடியுடைய சகாதேவர்கைகளும்
ஏதுக்கெனவிருந்தது யெங்களாராயுதமும்
தன்றேவிக்கிலலாத தைரியங்களேதுக்கு
வெற்றிமதயானை வீமரபொறுக்காரோ
அர்ச்சுனராசதுரை யார்சொல்லுங்கேளாரோ
யார்சொல்லுங்கேளாரோ ஐயன்மார்நால்வருந்தான்
தக்கப்புகழுடைய தருமர்சொற்கேட்டாரோ

அன்றுநான்சற்றே வறிந்திருந்தேனையாகில்
தக்கப்புகழுடைய தருமர்சொல்கேளேனே
நாலாம்கடுந்திரளார் நூற்றொருவர்பூமுடியை
வெட்டிவெளியிடுவேன் வீமனாகுனியற்கு
பட்டந்தரித்து பாருலகையாளவைப்பேனே
காவலர்ஐவருடன் கைகாட்டிசெவிப்பேன்
இதுபத்தினியாள்நின்று பாதகிக்கஅம்பலமோ
உத்தமியாள்நின்றாலும் உரிகொடுத்தவம்பலமோ
பாவைமனமுருகப் பருந்தாட்டமாட்டிவைத்தான்
அம்பலத்தைப்பார்த்து ஆனைமுகன்வயிறெரிந்து
கட்டழகன்சோமாதுமை கண்ணீர்நிறைமுகநாதித்தான்
இந்திரனுமக்கே வேங்கியழும்போது

புலந்திரன் அலங்காரிகோட்டையைக்காண்கிறது.

மேலைப்பறந்தது மேய்ந்தனனுதன்புரவி
காரிழையாள்மாது அலங்காரிகோட்டைகளாம்
கற்கோட்டைமுத்திகாயுங் கர்னைதுகாவல்களும்
ஆழமனல்பறித்து ஆகாயக்கோட்டைகட்டி
சத்திமதிலெழுப்பி சூரியனைக்காணாமல்
அஷ்டமதிலெழுப்பி ஆதித்தனைக்காணாமல்
வாசற்படிநெடுமே வைத்திருக்குங்காவல்களும்
விழித்தகண்மூடாத வெள்ளியர்க்குக்காவல்களாம்
தாமகுழலாட்கு தங்காரியாய்வந்து
காகசாமூத நற்கவரிசொரியாக
கூடமுழங்கவே குலவீரர்சூழ
கொக்கரிதனைநற்றிலையும் கூத்தாடிபாடிவர
ஊர்ப்பரித்துவடிவந்தார் அனைவைகடையாட்டு
கண்டான்புலந்திரனுங் கண்கள்ரெண்டுங்கொள்ளாதே
இது-மாமன்மார்காவல்களோ வைத்தவரிசைகளோ
அம்மான்மார்காவல்களோ அத்தைவரிசைகளோ
என்றுகைகைத்து இந்திரனம்பார்த்திருந்தார்

சொக்கர்பிராமணாபோல்வந்து கர்ணருக்குச்சொல்வது.

மலைமுடியானும் வந்ததற்குமுன்பாக
சோலைமலருடைய சொக்கருமப்பொழுது
பஞ்சாங்கவேதியன்போல் பாமன்வடிவெடுத்து
மன்னர்கருணர்முன்பு மறையவர்போலேவந்து
ஆள்வருந்தாய்காணுகுது அதிகருணவீரியரே
பத்திரமென்றுசொல்லி டாமனுமப்போய்மறைந்தார்
சொல்லியேபோய்மறைந்தார் சொக்கருமப்பொழுது

கன்னர்சலந்தாரி கோட்டைக்குவருவது.

அங்கதேசநாடாளும் அதிகர்ணவீரியனும
காரிழையாள்மாது கலந்தாரிகோட்டைவந்தார்
எண்ணமொழும்மாசேனை எண்பதினாயிரம்பேர்
உருவினகத்திதனை உறையிலேபோடாமல்
விழித்தகண்சிமிட்டாமல் வெளியிலேபார்த்திருந்தார்
தருமமுடியானுந் தலைவாசல்வந்தனிலே
அதைக்கண்டகாவலரை அதிகர்ணன்தானபார்த்து
அந்திப்பொழுதிலே ஐயர்வந்துசென்றாரே
ஆரவருகதுவென்று ஐயர்வந்துசொன்னாரே
காவலர்கள்வீரியரே கண்ணுண்டாப்பார்த்திருங்கள்
திட்டங்கள்சொல்லியே திருப்புகத்தேவேளையிலே

கன்னன் கலந்தாரிக்கு உடனசேர்மானவைத்தது.

சந்தரப்பூமுடியாள் தூக்கம்வருகுதென்று
கேளிக்கைவேண்டுமென்றாள் கிளிமொழியாள்நாயகரும்
அப்படியேநல்லதென்று அட்சணமேசேர்கருணர்
நட்டுமுட்டுநாகசுரம் கலமுடனேயனுப்பிவைத்தார்
சதுர்த்திர்க்கதகொலுவதனில் நாயகர்தான்மாதுகன்னி
அப்போதுமாதருக்கு ஆடலுடன்பாடல்களும்
பதினெட்டுமேளம் பண்பாகத்தானமுழங்க
சிற்றிடையாள்மாதர்கள் சிலம்புகலகலென்ன
ஆடலுங்கூற்றும் அரம்பையர்நாடகமும்
நாடகமுங்கூற்றும் நடிகேசர்கூத்தாளும்
ஆடாதகூத்துகளும் ஆடினாராயிரம்பேர்
கேளிக்கைபார்த்திருந்தாள் கிளிபவளவாயாளும்

புலந்திரன் ஆகாயத்தில் அதிசயப்படுகிறது.

ஆடல்பாடல்சத்தம் ஆகாயத்தானகேட்க
பெண்கள்குரலோசை புலந்திரர்க்குகேள்விபட
கோட்டைக்குள்கேட்குது கொம்பனையாளிருப்பிடமோ
காதுற்றுக்கேட்டிருந்தார் கனகபுரிவிண்மேல்

கலந்தாரிக்குச்சொக்கர்சொற்பனஞ்சாதிக்கிறது.

மாலைமுடியானும் வருவதற்குமுன்பாக
சோலைமலருடைய சொக்கருமேதுசெய்வார்
பஞ்சாங்கவேதியன்போல் பத்தினியாளபக்கம்வந்து
மாதுநித்திரைசெய்கையிலே மறையவர்போலேவந்து
சொற்பனஞ்சாதித்தார் தையலுக்கருங்குழற்கு
மங்கையரேஉன்னுடைய மணவாளனவந்தானகாண்
வந்தான்காணென்றுசொல்லி மாயமாய்போய்மறைந்தார்
வாசற்படிதனிலே மன்னனிருக்கக்கண்டாளே
எதிட்டுப்பார்த்ததுபோல இந்திரனாசீர்வடிவை
அலர்தாமரைநிறமும் பார்பவளச்செவ்வாயும்

மார்பில்பதக்கமும் வச்சிரமணித்தாழ்வடமும்
காதில்பணியழகும் கட்டழகு ஒப்பனையும்
உத்தமர்கள் புகழ்திரௌபதை தன் வருமாலைகட்டழகும்
ஒருவர்க்கொருவர் வுக்குமிகப்பெரியதாம்
உத்தரமேராவுகளும் வறன்முறைகட்டளையும்
மதுரையாடையாளர் மாதுளையில்கொடுத்ததுவும்
மாணிக்கமெத்தையிலே மன்னவருஞ்சென்றேறி
வெற்றிலைகையில் ஈந்து வியப்பினிலே பாடினதும்
தக்கோலந்தின்று தமுதிலைபாடினதும்
மாதுவிடையிலை மன்னனெழுந்திருந்து
போனதுமாக்கண்டு சொற்படுகையுகைவிழித்தாள்
சொப்பனங்கண்டதல்லால் சுந்திரரைக்கண்டதில்லை
என்னெம்மொழியுமட்டுஞ் சிறையிருக்கநீயுமன்றோ
என்னைச்சிறையிருக்க வைத்தீரோ ராமதேவர்
இச்சிறைமாக்கையிலே சவ்வாதிரதைவைத்தீரோ
மைத்துனனைத்தானிதுவே மாதுமணத்தானுருகி
எக்காலஞ்சென்றுமனம் இந்திரனைநான்காணை
கண்டகனவையெல்லாம் கனிமொழியார்தன்னுடனே
தோழிமார்தன்னுடனே சொல்லாதேபோமாகில்
எனக்காருயிரில்லையோ என்பார்கிளைத்திழைமார்
தமக்குருக்குழலாளும் தன்மனதில்தானடக்கி
வெண்பொருந்துகண்ணாளும் விசாரத்துடனேபடுத்தாள்

கஸ்தூரியும்தோழிமார் காற்று ஒடுக்கத்தால்
வேறொருமண்டபம்போய் படுத்தது.

ஆரணக்குத்தோழிமார் ஆருஞ்சிறப்பெரும
அம்மானார்பந்து மாலிகைமுலாடி
உடனேபள்ளிகொண்டார் வண்டார்குழலியர்கள்
பாதிராவும் பதினெட்டுநாழிகைமேல்
வாரிவெழுந்திருந்து மண்டபத்தினைச்சேர்ந்தும்
ஒடுக்கத்திலேவுள்ள மெல்லியர்வெயர்வைவிட்டு
அந்தமண்டபம்விட்டு அப்பாலேமண்டபத்தில்
இந்திரஞ்சேர்மண்டபத்தில் தேனமொழிமார்போய்படுத்தார்
மண்டபகூடத்தில் மங்கையர்கள்போய்படுக்க
ஒண்டிதனியாக ஒளிபிறைநுதலாளும்
கட்டார்கருங்குழலாள் கஸ்தூரிநாயகியும்
வேல்பொருந்துகண்ணாள் விசனமாய்ப்பள்ளிகொண்டாள்

புலந்திரன் கோட்டைக்குள் வருகிறது.

அந்தச்சமயத்தில் அழகுபுலந்திரனும்
ஆகாயமார்க்கத்திலே ஐவர்மான்புரவி

மேலாய்ப்பறந்தது வேந்தனுதன்புரவி
யாருமறியாமல் அங்கொருவர்காணுமல்
அரசர்றக்கோட்டைக்குள்ளே அவ்வொருவர்காணுமல்
சாதியர்களண்டையிலே தானிறங்கியது
எதிட்டுப்பார்த்திருந்தார் இந்திரருமப்போது
ஒக்கபணிபூண்டு ஓவியமாய்ப்பட்டுடுத்தி
கூடப்பணிபூண்டு கொய்யகமாய்ப்பட்டுடுத்தி
தேன்மொழிமாரெல்லாஞ் சேரப்படுத்திருந்தார்
அதுகண்டுபுலந்திரனும் அவரைமனதிலெண்ணி
ஆறுயிரம்பேரில் ஆரென்றுநானறிவேன்
ஆரென்றுசற்றேநா னாராய்ந்துபார்ப்பேனே
பூவணைமெத்தைகளில் பொற்கொடிமார்படுத்திருக்க
ஆரமுலைபாளே யாரென்றுநானறிவேன்
எதற்குஇங்கேவந்தேன் என்றுபார்க்கட்டளையால்
மண்ணூழிகாலமெல்லாம் வைபகத்தையாண்டாலும்
பெண்புகதிப்போ பிடாரியிலேயென்பார்கள்
எதுக்குநம்மையிங்கே இசைந்துவரவிட்டானோ
நின்றபுலந்திரனும் நெடுமூச்சைதானெறிந்து
கட்டழகிநாயகியை கண்டதில்லையெக்காலும்
காணுமனாமும் சனமதுவரைபோனுக்கால்
வாளால்துணிப்பானே மைத்துனனாம்பாராளே
வேந்தர்பெருமாளும் விசாரிடும்போது

புலந்திரனை புரவிபிறக்கிவிட்டது.

அப்போதுதன்புரவி அந்தவிடம்விட்டு
மாதயிருக்குமந்த வாசற்படிமுன்னாலே
கொண்டுவந்துவிட்டது கொற்றவனார்தன்புரவி
தாழவிறக்கியே தருமர்திருமகனை
மேல்பறந்துநின்றது வேந்தனவனபுரவி

புலந்திரன் கதவைத் திறந்தது.

தாள்பூட்டிருந்தகொரு தையலதுபொற்கதவு
மந்திரவாள்தனையெடுத்து மைந்தனார்மனிக்கதவில்
தாழைத்திறந்தது தையலதுபொற்கதவில்
மெள்ளநுழைந்தாரும் மெல்லியடுக்கையிலே

புலந்திரன் பெண்சாதியைக்கண்டது.

வாசற்படிதனிலே வந்துநின்றபன்னகனும்
வாய்மேலேகையைவைத்து மன்னவரும்பார்த்தாரும்
எதிட்டுப்பார்த்தார் இந்திரருமதேவியரை

வளர்ந்தெழுந்தமார்பும் மாதுளிருந்தனமும்
இரண்டெழுந்தபூமுலைமேல் செந்தாமரையழகும்
கண்புருவமிரண்டின் கருங்குருவியானதுபோல
மூக்குத்திருவழகும் முன்னுபிறையதுபோல
நாக்குத்திருவழகும் நாலாம்பிறையதுபோல
பல்வரிசை ஆணிமுத்தும் பார்க்கமுடியாது
தாடையிருபுறமும் தங்கப்பலகையைப்போல
இருதுடையின்நல்லழகும் இளவாழைத்தண்டதுபோல
அழகுதிருமார்பில் ஆபரணஞ்சாத்தியவள
மாறுமலர்பூண்டகொண்டு மாணிக்கமினுக்க
கண்டுபுலந்திரனுங் கைகள்ரெண்டுங்கொள்ளாமல்
இப்படிக்குமீறி எந்திழையுமவளர்ந்திருக்க
வைத்தேதலைவணங்குறார் மாபாவியாள்வேனே
பள்ளியறைசோடிப்பை பார்த்தார்பலபேரும்
வண்டார்குழலாளும் வாழைப்பெண்ணுமிருக்க
மாதுக்குபரமன்னர் வைத்தவரிசைகளை
வரிட்டுதான்பார்த்தார் திருமெத்தையும்
மெத்தையலங்கரித்து மேற்கட்டுதான்கட்டி
சுற்றியலங்கரித்து தோரணந்தான்கட்டி
கண்ணாடிசல்லிகட்டி கனக்கவலங்கரித்து
நான்குபுறமும் நவரத்தினக்கால்நிறுத்தி
சங்கிலிமுத்துச்சப்பரமுஞ் சாதிலிங்கமாலைகளும்
சித்திரஞ்சேர்மண்டபமுஞ் சேரவலங்கரித்து
மல்லிகைமுல்லையுடன் வாய்த்தசிறுசெண்பகமும்
வெட்டிவேர்மருக்கொழுந்து இணைமல்லிபூச்சரமும்
[illegible]கோர்த்து துணைமாலைதூக்கிவைத்து
பத்துபரிமளங்கள் வாசனைகள்தான்வீச
முத்தாலேதோரணங்கள் முறைமுறையாய்க்கட்டிருக்க
பத்திலேநல்ல பவளக்கால்தானிருக்க
சித்திரஞ்சேர்பூம்பட்டை சிறகமைத்திட்டு
சாருமணைபோட்டு தழவணையுந்தான்போட்டு
சண்பகப்பூச்சொரிந்து ஓடமலர்கண்ணாடு
காம்பரிந்தவெள்ளைப்பூ காரிகைக்குத்தான்சொரிந்து
மெல்லியபூம்பட்டு மேலேயிணைபோட்டு
சந்தனமுஞ்சாந்தும் தையலர்க்குத்தானமிட்டு
புனுகுடனேகஸ்தூரி போதவேதான்வைத்து

மடித்தபீலிச்சுருளும் வன்னப்பளாக்காயும்
செம்பொன்றளிகை திருவிளக்குவைத்திருக்க
தங்கப்பாதக்குறடுவைத்து சந்தனக்கிண்ணம்வைத்து
கெண்டியிலேதண்ணீரும் விளிமொழிக்குவைத்திருக்கும்
கற்பூரமுத்துக் காராவிசெய்வார்த்து
குத்துவிளக்குக் கொழுந்துடக்காலேற்றி
இருப்புறமுங்குத்துவிளக் கெரியவேபந்திழைக்கு
பொம்மைப் பதுமைகளும் பொற்கொடைகுழ்ந்திருக்க
அன்னநடையாட்டு அருமபதுமைதானிருக்க
வெண்சாமரைவீச வெள்ளிபற்றுபொம்மையெல்லாம்
கட்டழகிகாயவிக்கு கைவிளக்குக்கொண்டிருக்க
ஆரழகியாட்டு ஆலாத்திக்கொண்டிருக்க
சொம்பிலேதண்ணீர்கள் சிலர்பொம்மைகொண்டிருக்க
பொம்மைப்பதுமைகளை புலந்திரனுந்தான்பார்த்து
வரும்போது சொன்னேனே வையவளாட்டியரும்
ஆராய்ந்துமெத்தையை அன்புடனேதான்பார்த்து
பார்த்திருந்தோமென்று பதறிவெழுந்திருந்து
வாளுருவிக்கைபபிடித்து மன்னர்பெருமாளும்
மாணிக்கமெத்தையை மன்னவனுஞ்சுற்றிவந்தான்
பொம்மையைக்கண்டானே பின்பெருபெண்ணறியாள்
நீங்களோவென்றுசொல்ல நேரிலங்குழுமையான
தானுஞ்சிரித்துமே தனஞ்செயன்கிட்டவந்தார்
ஏறிட்டுப்பார்த்தாரே இந்திரனுக்தேவியரை
கொண்டைமுடியழகும் கொம்பனையாள்சீரழகும்
பொருந்துவயிலழகும் பொன்பிறைச்சுட்டிகளும்
கட்டழகிநெற்றியிலே கஸ்தூரிபொட்டழகும்
இட்டதிருநீரும் இருகாதில்குழையழகும்
மாணிக்கமின்னலோ வைடூரியங்களுமின்ன
ஆணிப்பொன்றுள்ளிழைத்த அன்னகதிருகொப்புகளும்
மாணிக்கவாளி மயிரிலேகுச்சோதிமின்ன
எஞ்சவிட்டகாதுக்கு எற்றப்பணிகளும்
காரைக்கழுத்தழகும் கட்டிவடந்தனழகும்
பாரியசொட்டை பவழத்தாழ்வடமும்
முன்கைமுதரிகளும் முழுகடகமோதிரமும்
சந்திரகடகமும் தாவித்திசோதிமின்ன
அந்தகடகமும் அழகானமோதிரமும்
பாடகதண்டைபம் பணிசிலம்புசோதிமின்ன
காலாழிபீலிகளும் கட்டழகிமாவடியும்
காலைத்தொடங்கியே கரிகுழல்வரைக்கும்
ஏறிட்டுப்பார்த்தாரே இந்திரருடதேவியரை

சந்திரனார் தேவியவள் சல்லரியுமிடலவே
மாயனார் தேவியவள் மாதுமைதிரலே
இந்திரனார் தேவியவள் இந்திராணியிடலவே
தாமக்குழலாளை தட்டியெழுப்பினால்
கூவியெழுந் திருப்பாள் கொம்பனைக்கென்னசொல்வேன்
ஓடி வருவாரோ உண்டானகாவலர்கள்
வேந்தன்புலந்திரனார் விசாரமிட்டுநின்றாரே

பெண்ணைப் புலந்திரன் எழுப்புதல்.

எப்படி யெழுப்பலாம் ஏந்திழையைப்போது
சந்தனத்தைவாரி மாதுவலர்மேல்விட்டெறிந்தான்
தில்லென்றுரைக்க தேன்மொழியாளப்போது
பள்ளிமெத்தைவிட்டெழுந்து பிரகாசமாகத்திரும்பி
அப்புறத்துக்கிப்புறமாய் அவள்திரும்பிதான்படுத்தாள்
அன்னநடைமாது அசையாமல்பள்ளிகொண்டாள்
போரஞ்சாமன்னர் புலந்திரனுந்தான்பார்த்து
கண்டாரேயிந்த கட்டழகிநித்திரையை
காமாதுரைக்கு காமப்பாரசித்திரைக்கு
இன்னொருவரானால் இப்படியேநித்திரைகள்
செந்நித்திரைக்குறுவு எப்படிக்கலாக்கண்போமே
சித்திரதேவியென்னும் சேயிழையைவென்றிடுவனே
ஒருசாமப்பொழுதிலே உத்தமிபேசிவந்தேனே
ஒருசாமமட்டாய் இருந்துவிளையாடி
விடியவொருசாமத்துக்கு மேன்மையுடன்போகவேணும்
இரவும்பகலும் மின்னியே மேற்றிசையே
மாதினைத்தட்டிவிட்டு மங்கையேபோய்வா
இவ்வுறைவாசிரு இடக்காலணிப்போனான்
சித்திராதேவியவள் சேரிழையாளபோனபின்பு
பூவணையைவிட்டுமே பொற்கொடியுந்தானிறங்கி
மங்கையர்கள்பள்ளிகொள்ளும் மண்டபத்துக்குட்புகுந்து
சித்திராதேவியவள் சேரிழையாள்போனபின்பு
போரஞ்சாமன்னர் புலந்திரவீரியரும்
தேவிமுகம்பார்த்து செம்பொன்முடிதானும்
தேவேந்திரன்பாலான் திருநீற்றைத்தானிறைத்தே
மந்திரவாளாலே மங்கையைத்தட்டினானே

கலந்தாரி புலந்திரனைக்கண்டது.

சற்றேதான்தட்டுமே தாமக்குழலாளும்
பொட்டெனவேகண்விழித்து பொற்கொடியுந்தான்பார்த்தாள்

உள்ளந்நடுநடுங்கி உடம்பெங்கும் விடவிடென்று
ஆரமுலையாட்டு அடிதவித்தாடையுபகால்நடுங்கி
பூவணையைவிட்டுமே பொற்கொடியுந்தானிறங்கி
மாணிக்கத்தூணருகே மயில்போலேநின்றாளே
எதிட்டுப்பார்த்தாளே இந்திரனுஞ்சீர்வடிவை
அந்தராயனென்பார்கள் அவரல்லகாணுமென்பாள்
அயமான்மாரென்பார்கள் அவரல்லகாணுமென்பாள்
காடுறைந்தபாண்டவர்கள் காவலர்களானக்கால்
மாலைமுடியாரென் மாமனமார்வந்தாரோ
அங்கவர்காணுமவள் அல்லவென்றுதான்பார்த்தாள்
முடிபணியும்பாண்டவர்கள் மூத்தாயிருப்பார்கள்
ஏதோதாயிவரும் இளசாயிருக்கிறாரே
எண்ணைப்பிராயமது இருபத்தாறாகிறதே
வாலைப்பிராயமது வயதுபதினாறிருக்கும்
வந்தாரொருவராய் மாளிகைக்குள்ளாக
தாதிமாரில்லாமல் தனியேயிருந்தேனே
வந்தவரிங்கே வலியபிடிக்கவந்தார்
நாயகனார்தாமெதிரே நாக்கைபிடுங்கிடுவோம்
மாளும்படியொழிய மண்ணிலிருப்பதில்லை
கற்கோட்டைமுத்திரையும் கர்னனிடகாவலெல்லாம்
இத்தனையுந்தாண்டி யிங்குவந்தார்யாரோதான்
வாசற்போயவனையும வதைசெய்துவந்தாரோ
மாலைமுடியாளும் மதிலேறிவந்தாரோ
ஆருமறியாமல் அரண்மனையில்புகுந்தாரோ
எதிட்டுப்பார்த்தாரே யிந்திரனார்சீரழகை
வாசற்படியிலே மணவறுபதாணிநடந்தார்
வாள்மேலேகையை மன்னவருமவைத்திருந்தார்
முத்தினருமாலை முடிமேலேகட்டிருக்க
கட்டழகர்நெற்றியிலே கஸ்தூரிபொட்டுமிட்டு
இட்டதிருநீறும் இருகாதுதன்னழகும்
